பெரிய எழுத்து

நல்லதங்காள் கதை

ஐதீகப் படங்களுடன்



ஸ்ரீமகள் கம்பெனி
122, வராகாமுத்தியப்பன் தெரு, சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

வித்வ சிரோன்மணியாகிய

புகழேந்திப் புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

நல்லதங்காள் கதை

[படங்களுடன்]



ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

கிளைகள்: மதுரை - கோவை - பெங்களூர் - திருச்சி,

இதன் விலை] [ரூ. 0—50

கடவுள் துணை

நல்லதங்காள் கதை

தோத்திரங்கள்

கலி விருத்தம்

இந்துவேணிய னீஸ்வரியே பொற்பினில்
நந்துவாமிந்த நல்லதங்காள்கதை
முந்துசெந்தமிழ் மொழியவொருகொம்பு
சிந்தூரமிரு சேவடிபோற்றியே.

விநாயகர் துதி

வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
அத்திமுகத்தோனே அரனார் திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்றோனே
கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய்நல்லதங்காள் பெண்ணின்கதைபாட
அறியாதான் நாவதனில் அன்பாய்வருவதற்கு
துரிதமுடனே துணையாகநீவருவாய்
தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள் வாராமல்
நம்பிக்கைவைத்தெந்தன் நாவிற்குடியிருந்து
ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனேமுன்னடவாய்
பானைவயிற்றோனே பாமரிடபுத்திரனே
பாடவேயெந்தனுக்குப் பகவானேவாக்கருளும்.

சுப்பிரமணியர் துதி

திருத்தணிகைவேலனே திருமால்மருகோனே
கருத்துவைத்துஎந்தனை நீகார்த்தருளவேணுமையா
வள்ளிமணவாளா மகேஸ்வரனார்புத்திரனே
புள்ளிமயிலேறும் புண்ணியப்பேரூரா
நல்லதங்காள்கதையை நலமாகப்பாடுதற்கு
புல்லறிவன் என்னாவில் புண்ணியரே நீரிருந்து

கூடத்துணையிருந்து குற்றங்கள்வாராமல்
பாடத்துணையெந்தனுக்குப் பகவானேவாக்குளாயும்

சரஸ்வதி துணை

தாமரைச்செங்கமலந் தன்னிற்பிறந்தவளே
கோமளசரஸ்வதியே கொம்பனையாள் நல்லதங்காள்
புண்ணியவதிகதையைப் புகழாகப்பாடுதற்கு
எண்ணியிருந்த எளியேனிடநாவில்
சொந்தமாய்ப்பாடுதற்குத் தோகையேயிப்போது
வந்துகுடியிருப்பாய் மறையவனார்தேவியரே
பூவிலுதித்ததொரு பொற்கொடியேஎந்தனுக்கு
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை

கலிச்சந்த விருத்தம்

மஞ்சுகுழல்பிஞ்சுமுலை வஞ்சிநல்லதங்காள்
விஞ்சுவரலாறுசொல மிஞ்சுசிவனார்முன்
கொஞ்சுமுலைமாதுதரு குஞ்சரகணேசன்
செஞ்சரணகஞ்சமல ரஞ்சலிசெய்வோமே

கதையின் வரலாறு

திங்கள்மும்மாரிபெய்யுஞ் சீரானநன்னாடு
எங்குமணிவிளையும் எழிலானநன்னாடு
செஞ்சாலிநெல்விளைந்து செழிக்கும்வளநாடு
தஞ்சாலிடறயராமல் தழைக்கும்வளநாடு
நாற்றைப்பிடுங்கிமன்னர் நன்றாய்விடுவார்கள்
சேற்றைக்குழப்பிப்பள்ளர் திறமாய்விடுவார்கள்
வயலிற்களைபிடுங்கி மாதர்கள்போடுவார்கள்
கயலென்றுதங்கள்கண்ணைக் கருதியேதேடுவார்கள்
தோள்மேலெடுப்பார்கள் சுமந்துநடப்பார்கள்
ஆள்மேலெடுப்பார்கள் அசைந்துநடப்பார்கள்
கார்நெல்லறுப்பார்கள் களத்தண்டைகொட்டுவார்கள்
வார்கொள்மாட்டைப்பிடித்து வந்துபிணைகட்டுவார்கள்
மாரிநெல்லுதிரும்படி சார்ந்தேயுழுவார்கள்
இனிதானதொழில்களிலே ஏதுயவழுவார்கள்
ஏாடிக்கும்பண்ணையாள்கள் எங்குந்திரிவார்கள்

பேடாடித்துநெற்படுத்தி பூசைபுரிவார்கள்
பூங்காவனப்பெருமைதனைப் புகழமுடிபோகாது
பூங்காவனப்பெருமை புகழத்தொடங்கினேன்காண்
துலங்கும்வாழைமரங்கள் இலங்கும்பலாமரங்கள்
குலுங்கும்பாக்குமரங்கள் நலங்கொள்தேக்குமரங்கள்
மாமரச்சோலைகளும் மருதிலுப்பைச்சாலைகளும்
தாமமிகுசந்தனமும் தவனமிகுந்தவனம்
தங்கசாமந்திகளும் சண்பகப்பூபந்திகளும்
மிக்ககுயில்பாட வீறுமயிலாட
ஆண்டிகள்தங்குமிடம் அரவிந்தம்பூத்தவனம்
பாண்டிமகாநாட்டில் பாரமிகவுண்டென்று
மூதுவரிளைஞரெல்லாம் முன்னுரைத்தசாஸ்திரத்தில்
மதுரார்புரியென்று வானோர்முதல்சொல்லுவார்கள்
திக்கெட்டும்மன்னர்பதம் தென்மதுரைமாநகரம்
சூழ்வினைத்துன்பமெல்லாம் தொலைக்குந்திருநகரம்
வாழ்விக்கும் அட்டசெல்வம் மன்னுந்திருநகரம்
வாணுளரிபிரமர் வந்திருக்குந்தன்னகரம்
மீனாட்சிமாதுமையாள் மேவுஞ்சீர்பொன்னகரம்
உப்பரிகைமாளிகையும் உயர்ந்தபெருமாளிகையும்
செப்பரியமாடங்களும் சேர்ந்தசித்ரகூடங்களும்
செம்பொன்கோட்டைகளும் திகழரியபேட்டைகளும்
அம்பொன்னுற்கோயில்களும் அழகானவாயில்களும்
முத்துசிவிகையேறு முடிமன்னர்வீதிகளும்
தத்துப்பரியேறும் தடமன்னர்வீதிகளும்
வேல்கொடுக்கும்மன்னர்பலர் மேவியேவாழ்வீதிகளும்
கோல்கொடுக்கும்வேளாளர் கூர்ந்துவாழ்வீதிகளும்
சாத்திரஞ்சொல்லுகின்ற சதுர்மறையோர்வீதிகளும்
காத்திரஞ்சேர்வாணிபஞ்செய் கனவணிகர்வீதிகளும்
கொட்டித்தட்டிப்பணிசெய்யும் கொல்லாவீதிகளும்
தட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும்
பதினெட்டுஜாதிவகை பலமன்னர்வீதிகளும்
துதிபெற்றமதுரையிலே சொல்லவுங்கூடாது
தராதலத்துமன்னர்களில் சந்திரகுலத்துதித்தோன்
நராதிபனும்இராமலிங்க நல்லமகாராஜன்
மணிமகுடந்தாங்க மனக்களிப்புமேலோங்கி

அணிமதுரைப்பட்டணத்தே அரசாட்சிசெய்யவென்று
செங்கோல்பிடித்துச் சிறப்போடரசுரிமை
மங்காதமண்டபத்தை மநுநீதிதப்பாமல்
ஆறிலொருகடமை அரசனும்வாங்குவான்காண்
மாறிஎவருக்கும் வாக்குப்பிசகானே
இந்தப்புவிதனிலே இந்திராணியென்பவளை
சுந்தரமாய்த்தாலிகட்டி சுகிர்தமுடனரசில்
சிங்காதனமேறித் தேர்வேந்தர்வீற்றிருந்தார்
அங்காசனத்திருந்த ஆரணசாஸ்திரிமார்
வேதியரும்சோதிடமும் வேந்தர்முகம்பார்த்து
நீதியெடுத்துநிகழ்த்தலுற்றார் மன்னனுக்கு
எட்டுநவகோண முலகாளும்வேல்வேந்தே
பட்டந்தனக்குப்பிள்ளை பாராளவில்லையே
தங்களரசுரிமை தானாளவில்லையே
எங்களரசனே யாங்களென்னசெய்வோமென்றார்
சொன்னமொழிகேட்டுத் தோன்றல்சினமடைந்து
தன்னரசுபட்டமாளத் தான்பிள்ளையில்லையென்று
எண்ணுவிசாரமுட னேக்கமிகவடைந்து
மண்ணாளும்செங்கோல் மந்திரிதனக்கீந்து
மனைவிதனையழைத்து வன்காட்டிடஞ்சென்று
சுனையடர்ந்தமேருவிடந் தோன்றல்மனைவியுடன்
உலகாண்டதைமறந்து ஊமைமௌனியர்போல்
இருகுதிருநீற்றை எங்குமேதானணிந்து
சலியாதுருத்ராட்சந் தானணிந்துமனைவியுடன்
புலியாசனம்போட்டுப் பொற்பாயிருபேரும்
புல்லும்படியமர்ந்து பூசைவழிபாடு
அல்லும்பகலுமாக வாசியாலேசிவனை
மனதிலுருத்தியே வந்தித்தார்சிந்தையுள்ளே
கனகவுமைமாது கண்டாளிவர்தபசை
பரமசிவனைநோக்கிப் பார்வதியாள்சொல்லுகிறாள்
வாமமிருந்தமாதேவா மாதவத்தைக்கண்டீரோ
பிள்ளைக்குவேண்டுகிற பெருந்தபசைப்பார்த்தீரோ
கொள்ளையிதுவரையிற் குவலயத்திற்கண்டறியோம்
தவசுக்குத்தான்மகிழ்ந்து தக்கவமைந்தனைக்கொடுப்பீர்
சிவபெருமான்கண்டு சிந்தைமகிழ்ச்சிகொண்டு

எருதேறி இருவருமே ஏகாந்தமாகவந்தே
விருதுபெறமைந்தன் விளம்பிமிகக்கொடுத்தார்
பெண்ணொன்றுபிள்ளை ஒன்று பிறக்கும்படிகொடுத்தார்
மன்னரசன்மனைவியோடு மாதாவைத்தான்தொழுது
விமலனைப்போற்றிசெய்து வீடுவந்துதான்சேர்ந்தார்
தமக்கிரண்டாண்டுக்குள் தாயார் இறந்திடவே
தக்கமைந்தனுக்கும்நல்ல தம்பியென்றுபெயருமிட்டு
ஒக்கநல்லதங்கைஎன உத்தமியைத்தான்வளர்த்தார்
பள்ளிக்குவைத்தார்கள் பாலரிருவரையும்
தெள்ளுதமிழ்தெலுங்குந் தேர்ந்தேயுணர்ந்தார்கள்
வில்வித்தையானையேற்றம் மிக்ககுதிரையேற்றம்
கல்விப்பயிற்சியெல்லாம் கற்றுத்தெளிந்தார்கள்
மைந்தன்றனக்கு மணமுடிக்கவேணுமென்று
குந்தளதேசமாளும் கோமுகன்பெற்றெடுத்த
மூளியலங்காரி மொய்குழலாள் நாயகியை
நாளிட்டுக்கேட்டு நல்லமணமுடித்தார்
மணமுடித்தபத்தாளுள் மாதாயிறந்துவிட்டாள்
இணையிலிந்திராணிபோக இராமலிங்கமகாராஜன்
மனைவியும்போனவுடன் மைந்தன்தனையழைத்து
தனையள்தனக்கரசைத் தானீந்துசொல்லலுற்றார்
நல்லதம்பியிவ்வுலகை நானுண்டவாறுபோல்
வல்லமுடிதரித்து மண்ணுலகில்மாந்தருக்கு
குறைவுவாராமலேநீ குடிகளைவோர்க்கும்
நிறைசெங்கோல்கோணாது நீதிசெலுத்திடுவாய்
உந்தனுடன்பிறந்த உற்றநல்லதங்காளை
எந்தநாளும்பசுமை எய்தியிருக்குமிடம்
ஆராய்ந்துபார்த்து அழகாய்மணமுடித்து
சீராகச்சீதனங்கள் சிந்தைமகிழ்ந்தீந்து
அரசாட்சியுலகை ஆண்டிருப்பாயென்றுசொல்லி
பிரசமலர்கொன்றைப் பெம்மானையுள்ளிருத்தி
இராமலிங்கமன்னவனும் இறந்தவுடன்நல்லதம்பி
கருமாதிகாரியங்கள் கனமாய்முடித்தாச்சு
ஒருபோதும்பொல்லாங்கு உலகத்துக்கெய்தாமல்
தேசுபெறச்செங்கோல் செலுத்தியேவாழ்ந்திருக்க
காசிமகாராஜன் கனமதுரைவந்துசேர்ந்து

நல்லதம்பியைநோக்கி நல்லதங்காள்நாயகியை
நல்லமணஞ்செய்ய வார்த்தைமிகப்பேசி
பரியம்கொடுத்தானே பத்துலட்சம்பொன்நிதிகள்
பிரியமுடன்நல்லதம்பி பெண்கொடுக்கவேயிசைந்தார்

திருக் கலியாணச் சிறப்பு

சாந்தால்சரிகுழலே சற்குணமேநல்லதங்காள்
நாழியிட்டநாள்முகூர்த்தம் நாடெங்குந்தானறிய
கலியாணம்கலியாணம் காரிழைக்குக்கலியாணம்
என்றைக்குக்கலியாணம் எங்களிளங்கொடிக்கு
சித்திரை மாதத்திலே செல்வக்கலியாணம்
கலியாணமென்றுசொல்லிக் கடலேறிப்பாக்குவைத்தார்
மாட்டின்மேல்பாக்கு மனிதற்குப்போகவிட்டார்
சின்னமடிகோலிச் சீமையெங்கும்பாக்குவைத்தார்
பெரியமடிகோலிப் பூமியெங்கும்பாக்குவைத்தார்
பனைமரம்பிளந்து பந்தக்கால்செப்பனிட்டார்
தென்னைமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசற்களில்செப்பனிட்டார்
மூங்கில்மரம்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
இட்டார்கள்பந்தலை இருபதின்காதவழி
தொட்டார்கள்பந்தலை தொண்ணூற்றுங்காதவழி
முந்நூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமாங்கலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலியைக் கழுத்திலே என்றுரைத்தார்
தாலிதரிப்பதற்குத் தார்வேந்தனப்போது
அவ்தமிட்டமங்கிலியம் அவ்வரசன்தான்வாங்கி
அரகராவென்றுசொல்லி அணிந்தாரேமாங்கிலியம்
கன்னிதிருக்கழுத்தில் கட்டினான்மங்கிலியம்
மாதுதிருக்கழுத்தில் மங்கிலியஞ்சூட்டினான்
தாலிதரித்தபின்பு தார்வேந்தன்நல்லதம்பி
வந்தவுறன்முறைக்கு வழங்கினான்போஜனங்கள்
தாம்பூலபுஷ்பமுதல் தான்கொடுத்தார்வந்தவர்க்கு
எல்லோருக்கும்கொடுத்து இனிதாய்முடித்தபின்பு
பந்தல்சபைதனிலே வந்தவர்கள்முன்பாக



சீதனச் சிறப்பு

கலியாணவாசலிலே என்னென்னசீதனங்கள்
என்னென்னசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
பட்டிநிறைந்திருக்கும் பால்பசுவாஞ்சீதனங்கள்
ஏரிநிறைந்திருக்கும் எருமைமாடாஞ்சீதனங்கள்
காடுநிறைந்திருக்கும் கருப்பாடாஞ்சீதனங்கள்
மேட்டுக்கழனி நெற்கழனிச்சீதனங்கள்
பள்ளக்கழனிப் பயிர்கழனிச்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்
இன்னமுண்டுசீதனம் எங்களிளங்கொடிக்கு
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசவேண்டாம்
வரிசைகளில்லையென்று வார்குழலேயேசவேண்டாம்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
தோளுக்குத்தோளு துளசிமணிச்சீதனங்கள்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமைகளுடன்
கையிற்சரிபவளங் கனகமணித்தாவடங்கள்
மார்புசரப்பளியாம் வயிரமணிச்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேயேசாதே
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
உட்கட்டுந்தாலி உருக்குமணியாபரணம்
உட்கார்ந்துமோர்கடைய முக்காலிபொன்னாலே
சார்ந்திருந்துமோர்கடைய சாறுமணைபொன்னாலே
பிடித்துப்பால்கறப்பதற்கு பிடிகயிறும்பொன்னாலே
அணைந்திருந்துபால்கறக்க அணைகயிறுபொன்னாலே
அத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
ஆலாத்திப்பெண்களிலே ஆறுலட்சம்பெண்களுமாம்
பாக்கு நறுக்கியிடும் பரிவாரமெத்தவுண்டு
வெற்றிலைச்சுருள்மடிக்க வெள்ளாட்டிப்பெண்களுமாம்
தெற்குத்தெருநிறைந்த தென்னமரஞ்சோலைகளாம்
வடக்குத்தெருநிறைந்த வாழைமரஞ்சோலைகளாம்
கிழக்குத்தெருநிறைந்த கிளாமரங்கள்சீதனங்கள்
மேற்குத்தெருநிறைந்த விளாமரங்கள்சீதனங்கள்

குத்துமுலக்கைகளும் கூடைமுறஞ்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்

நல்லதங்காளும் காசிராஜனும் தங்கள் தேசம் போகுதல்

சீதனங்கள்தான்கொடுத்துச் சிறப்பாகநல்லதம்பி
தங்கைமுகம்பார்த்துத் தார்வேர்தனே துரைப்பான்
ஏறுமம்மாதண்டிகையில் என்பிறவிநாயகமே
ஏறுமென்றுசொன்னவுடன் இளங்கொடிகண்சிவந்து
அடித்துப்புரண்டழுதாள் ஆபரணமற்றுவிழ
முட்டியழுதாளே முத்துமணியற்றுவிழ
கட்டியழுதாளே கனகமணியற்றுவிழ
தாவியழுதாளே தலையணைமெத்தையிலே
அப்போதுநல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஏனம்மாதங்கைஉனக் கித்தனைகோபமென்ன
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
நீ-நினைத்தபிரகாரம் நான்வருவேன்தங்கையென்றான்
பாலால்குறைவுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
பூவால்குறைச்சலுண்டோ பொற்கொடிநாயகமே
ஏறுமம்மாதண்டிகையில் என்பிறவித்தங்கையரே
நீரேறும்தண்டிகைக்கு முன்தண்டிநம்மதென்றான்
தோழியருமுன்னடக்கத் தோகைமயிலனைக்கு
பாங்கியர்கள்முன்னடக்கப் பாவையிளங்கொடிக்கு
பாவையர்கள்தானடக்கப் பத்தினியும்வழிநடந்தாள்
காலாளுஞ்சேவகரும் காவல்ருமுன்னடக்க
கத்திகட்டுஞ்சேவகர்கள் கன்னடியர்முன்னடக்க
ஈட்டிபிடிமன்னர் இருபுறமுஞ்சூழ்ந்துவர
யானையும்சேனையும் அத்தனையும் முன்னடக்க
குதிரைபரிவாரம்கோடி தளம்பின்னடக்க
கட்டியங்கூறிவர கவிவாணர்பாடிவர
சிங்காரதேவதாசி தெருவில்நடனம்புரிய
ஊர்வசிரம்பையைப்போல் உலாவிநடனம்புரிய
புகுந்தாளாண்மனையில் புருஷனிணைபிரியாள்

எதிரொருவரில்லாமல் எல்லையரசாண்டிருந்தாள்
மற்றொருவரில்லாமலே மதுரையில்வாழ்ந்திருந்தாள்
வாழும்பெருமைகளை வாக்குரைக்கக்கூடாது
வாழ்ந்திருக்கும்போது மகாதேவர் தன்னருளால்
இனிமொழிமாதருக்குக் கெர்பமதுவுண்டாகி
ஏழுவருஷத்துக்குள் ஏழுபிள்ளை பெற்றெடுத்தாள்
பிள்ளைகளைப்பெற்றுப் பேருண்டாய்வாழ்ந்திருந்தாள்
வாழ்ந்திருக்கும் நாளையிலே வாழ்வரசிசிமையிலே

நல்லதங்காளுக்குப் பஞ்சகாலம் வந்தது

பன்னிரெண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
சிறுசம்பாபெருசம்பா சீரகசம்பாவாகு
கார்நெல்லுகுண்டுசம்பா கம்புதினைகேழ்வரகு
துவரை அவரைகொள்ளு சோளம்நவதானியமும்
நாட்டில்மழையுமில்லை நல்லவிளைவுமில்லை
தேசஞ்செழிப்புமில்லை செந்நெல்விளைவுமில்லை
இப்படியாகப்பஞ்சம் நேர்ந்ததிளங்கொடிக்கு
வாராதபஞ்சமென்ன வந்ததிளங்கொடிக்கு
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே
மாக்காலுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
நாழியுருண்டபஞ்சம் நாயகனைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்துத் தனிவழியேநின்றபஞ்சம்
கூரைபறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்
கணவனைப்பறிகொடுத்து கைக்குழந்தைவிற்றபஞ்சம்
இப்படியாக இளங்கொடிக்கு வந்திருக்க
அப்பெரியபஞ்சத்திலே ஆரணங்கேதுசெய்தாள்
தாலிதவிரவைத்து தங்கமெல்லாம்விற்றுண்டாள்
மாலைதவிரவைத்து மற்றதெல்லாம்விற்றுண்டாள்
ஆலாத்திப்பெண்களில் ஆறுலட்சம்விற்றுண்டாள்
பாக்குநறுக்கிடும் பணிப்பெண்ணைவிற்றுண்டாள்
வெற்றிலைசுருள்மடிக்கும் மெல்லியரைவிற்றுண்டாள்
மாங்கள்முதலாவது வந்தமட்டும்விற்றுண்டாள்
குத்துமுலக்கைகளை கூடைமுறம்விற்றுண்டாள்
அண்ணனிடசீதனங்கள் அத்தனையும்விற்றுண்டாள்

தமயனிட்ட சீதனத்தை அத்தனையும்விற்றுண்டாள்
தங்கப்பணிதியெல்லாம் தவிட்டுக்குவிற்றுண்டாள்
இத்தனையும்தான்விற்று ஏழையாய்நின்றுளே
தங்கப்பொருள்விற்றுண்டுந் தாங்கமுடியாமல்
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்தவிடம்போறேனென்றாள்
இப்படியாக இளங்கொடியாள் தானுரைத்தாள்
அப்போது ஆளன் ஆரணங்குக்கெடுத்துரைப்பான்
அடி-இப்போதுபோகிறது இனிதல்லவுத்தமியே
வாழ்ந்துகெட்டுப்போனுயானல் வலதுசிரிப்பாரடி
கெட்டுநொந்து போனுயாகில்கிளையிலுஞ்சேர்க்காரடி
கண்டார்சிரிப்பாரடி காசினியோரேசிடுவார்
பார்த்தார்நகைப்பாரடி பாரிலுள்ளோரேசிடுவார்
உன்னைத்தநாயகிமார் உகந்துசிரிப்பாரடி
வலதுக்கிடங்கொடாதே வார்குழலேநாயகமே
பொன்னேநவமணியே புணர்கிளியேசொல்லுகிறண்டி
ஆனாலும்பெண்மயிலே அருங்கிளியேநாயகமே
தாலிகட்டிக்கொண்டமுதல் தனிவழியேபோனதில்லே
மாலையிட்டுக்கொண்டமுதல் மறுத்துநாம்போனதில்லே
இப்போதுபோகிறது இனிதல்லவுத்தமியே
தண்டிக்குத்தண்டிபெண்ணே சரியாகவாழ்வோமானல்
வாவென்றழைப்பார்கள் வகையுண்டாய்ப்பேசுவார்கள்
கெட்டமகள்போனுயானல் கிழிந்ததடுக்கிடுவார்
வாழ்ந்தமகள்போனுயானல் வண்ணத்தடுக்கிடுவார்
இப்போதுபோவதுனக் கியல்பல்லவுத்தமியே
சாணியெடுத்தாகிலும்நாம் தட்டிப்பிழைப்போமடி
கூலியெடுத்தாகிலும்நாம் கூடிபிழைப்போமடி
வேலிவிறகொடித்து விற்றுப்பிழைப்போமென்றான்
இப்படியாகக்கணவன் எடுத்துரைக்கும்வேளையிலே

நல்லதங்காள் புருஷன் சொல்லைத் தடுத்து தாய் வீட்டுக்குச் செல்லுதல்

அப்போதுநல்லதங்காள் ஆளனுக்கேதுசொல்வாள்
பூமுடிக்கும்கூந்தலிலே புல்லெடுக்கக்காணமோ

வேர்முடிக்குங்கூந்தலிலே விறகெடுக்கஎன்விதியோ
சந்தனமிழைக்குங்கையால் சாணிதட்டக்காரணமோ
குங்குமமெடுக்குங்கையால் கூலிவேலைசெய்யலாமோ
ஆனைகட்டி எங்களண்ணன் அத்திபுரமாளுகிறார்
குதிரைகட்டிஎங்களண்ணன் குவலயத்தையாளுகிறார்
ஆளுகிறார்சீமையெல்லாம் அரண்மனையும்பேர்போக
என் அண்ணனரண்மனைக்கு அரசாளப்போறேனென்
தமையனரண்மனைக்குத் தாய்வீடுபோறேனென்றாள்
அப்போது ஆளன் அரிவையாருக்கேதுரைப்பான்
பேச்சுதனைக்கேளாமல் பெண்மயிலேபோறாயோ
போறவிடந்தனிலே பிழைமோசம்வந்துவிடும்
என்றதைக்கேட்டு எடுத்துரைப்பாள் நல்லதங்காள்
புத்திரரை வளர்த்து வருவேன்காண் புண்ணியரே
மைந்தரை நான்வளர்த்து வருவேன்காண் மன்னவரே
போய்நான்வாறேனெனப் பொற்கொடியாள் நமஸ்கரித்
என்பேச்சுக்கேளாமல் ஏந்திழையேபோகிறாயோ [தாள்
கொண்டவனார்வார்த்தை கோடுதவறாதே
ஆளன்சொல்தள்ளாதே அரும்பாவிசண்டாளி
புருஷன்சொல்தள்ளாதே பொல்லாதசண்டாளி
நீ-போனாலும்போறாயடி புத்திரர்பதனமடி
மைந்தர்களுக்குச்சேதம் வந்ததென்றுகேட்டாலே
நீ-ஈயாய்ப்பறந்தாலும் இருதுண்டாய்வெட்டிடுவேன்
காற்றாய்ப்பறந்தாலும் கண்டதுண்டம்செய்திடுவேன்
மக்கள்பதனமடி மங்கையரே நடவுமென்றான்
பிள்ளைகள்பதனமடிப் பெண்ணே நடவுமென்றான்
அப்போது நல்லதங்கை ஆளனைத்தெண்டனிட்டாள்
போய்வாறேனென்று புருஷனைத்தெண்டனிட்டாள்
தோளிலொருபிள்ளை வைத்து தோகைமயிலனையாள்
பக்கத்தில்பிள்ளைவைத்து கடுகவழிநடந்தாள்
முதுகுமேலபிள்ளைவைத்து மொய்குழலாள்நடந்தாள்
பத்தினியும்முன்னடக்கப் பர்த்தாவும்பின்னடக்க
இருவருமப்போது இசைந்தவழிநடந்து
பார்ப்பாரத்தெருகடந்து பாளையவீதிவந்தார்
வன்னியர்தெருகடந்து வாழுரசர்வீதிவந்தார்
செட்டித்தெருகடந்து சேயனார்வீதிவந்தார்

வேளாளர்தெருகடந்து வேகமுடனுக
பலதெருவுந்தான்கடந்து பட்சமுடன்வாராளே
தேரோடும் வீதி தெருவீதிக்கோடியிலே

நல்லதங்காளுக்கு அபசகுனம் நேரிடல்

கன்னிகழியாப்பெண் கையில்நெருப்பெடுத்தாள்
வாழாக்குமரியவள் மீளாநெருப்பெடுத்தாள்
வண்ணான் வெளுத்த புடவைகண்டாள்மங்கையரும்
வாணிபன்கூடைதனை வரக்கண்டாள்தன்னெதிரே
ஓரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானான்
சாரைகுறுக்காச்சு சர்ப்பந்தடையாச்சு
காடையிடமாச்சு கருங்குருமான்கட்டாச்சு
பூனைகுறுக்காச்சு புதுப்பானைமுன்னுச்சு
அப்போதுதன்கணவ னரிவையர்க்கேதுசொல்வான்
ஆகாச்சகுனம்பெண்ணே அடியெடுத்துவைக்காதே
பொல்லாச்சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
குட்டியிட்டநாகேந்திரன் குறுக்கேயிடமாச்சு
என்றுமவருரைக்க இயலான நல்லதங்காள்
ஆகாச்சகுனத்தை அறிந்துவரவேண்டுமென்றாள்
பொல்லாச்சகுனத்தைப் போய்பார்க்கவேணுமென்றாள்
போய்ப்பார்த்துவாரேனென்று பூவையுந்தெண்டனிட
பதிங்காதவழிதூரம் பர்த்தாவும்வழிவிட்டார்
மாதவளைபோகவிட்டு மன்னனும் திரும்பிவிட்டார்
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குநடக்கலுற்றாள்
ஓங்கிவளர்ந்தெரு மூங்கில்வனச்சாலைவிட்டு
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சம்வனந்தாண்டி
சூரக்காய்காய்க்கும்வனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
கொஞ்சிபழுத்தவனம் கோவைபழுத்தவனம்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
பேய்நுழையாக்கானகத்தே போய்ப்புகுந்தாள்கட்டழகி
வழியுந்தெரியாமல் வகைதப்பிநின்றழுதாள்
அத்துவானக்கானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
பூமரத்தின்சோலையில் பொற்கொடியும்வந்துநின்றாள்
மாமரத்தின் சோலையில் மங்கையரும்போய்நடந்தாள்
மக்களைச்சூழவைத்து மங்கைபுலம்பலுற்றாள



பிள்ளைகளைச்சூழவைத்துப் பெண்பெருமாளழுகலுற்ளு
மாமரத்தின்சோலையிலே மங்கைபுலம்பலுற்றாள் [ள்
பிள்ளையழுகிறதும் பெண்ணாள்கலங்குறதும்
கன்னியழுகிறதும் காளைபுலம்புறதும்
மக்களழுகிறதை மாமரமும்பார்த்தழுமாம்
அத்துவானக்கானகத்தில் அழுதுபுலம்புகையில்
ஏழுபிள்ளை நல்லதங்காள் இருந்துபுலம்புகையில்
ஆனைலழகுமன்னன் அண்ணன் நல்லதம்பியவன்
ஆண்டிருக்கும்சீமையிலே அவனுடையமாளிகையில்

நல்லதம்பி கனவு காண்கிறது

தூக்கம்வருகுதென்று தூங்குமஞ்சமெத்தையிலே
தங்கப்பொன்கட்டிலிலே தான் தூங்கும்வேளையிலே
சொர்னப்பொன்கட்டிலிலே சொப்பனம்கண்டானே
மனையிற்பிறந்தபெண்ணாள் மாதுநல்லதம்பிறவி
தாலிதரித்துக்கொண்டு தன்புருஷன்வீடுவந்து
நாற்பத்தொருவருஷம் நலமாகவாழ்ந்திருந்து
ஏழுபிள்ளைபெற்றுமவள் இருக்கின்றவேளையிலே
பொல்லாதகாலமது சொல்லாமல்வந்ததுவாம்
பன்னிரண்டொருவருஷம் பஞ்சம்வந்துநேர்ந்ததாம்
தாலிதவிரமற்றத் தங்கமெல்லாமுண்டபஞ்சம்
மங்கிலியந்தான்தவிர மற்றதெல்லாமுண்டபஞ்சம்
தாங்கமுடியாமல் தாய்வீடுவருவதுமாய்
வழிகள்தெரியாமல் வனத்தில்புலம்புவதாய்
காட்டிலேசத்தமிடக்காதிலேகேட்டதுபோல்
சொப்பனங்கண்டானே துரைமன்னன்நல்லதம்பி
ஒன்றைக்குரலுமென்ன ஒருத்தியுடசத்தமென்ன
அத்துவானக்கானகத்தில் அழுகிறாள்பெண்பெருமாள்
தூங்கிஎழுந்திருந்தான் துய்யகனுக்கண்டதுபோல்
அலறியெழுந்திருந்தான் அல்லலகண்டதுபோல்
ஓங்கியெழுந்திருந்தான் ஓங்காரக்கோபமுடன்

நல்லதம்பி காட்டில் வேட்டைக்கு வந்து தங்கையைக் காணல்

கச்சைவரிந்துகட்டிக் கருங்கச்சைதானணிந்து
வாழுருவிதோளில்வைத்து மன்னனெழுந்திருந்தான்

கருநாயுஞ்சங்கிலியுங் கைக்கேற்ற அம்புகளும்
முள்ளிட்டவேலியெல்லாம் முருக்கப் பூவில்லுகளும்
சள்ளிட்ட நாயுடனே சகலகுலபாண்டியரும்
வெள்ளானைமேலேறி வேட்டைக்குவாரானங்கே
கருப்பானைமேலேறிக் காட்டுக்குவாரானங்கே
ஆனையின்மேலேறி அதிர்வேட்டைவாரானே
குதிரையின்மேலேறிக் குதிரைவேட்டைவாரானே
காட்டிலேவந்துமவன் கனவேட்டையாடையிலே
வேட்டைகளாடிக் களைக்குமந்தவேளையிலே
ஆனைகுதிரையெல்லாம் அங்கங்கேதானிருத்தி
குதிரைபரிவாரம் கோடிதலம்தானிருத்தி
ஆணழகன் நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஆரடாசேவகரே அர்க்கார்கள்தம்பிமாரே
அத்துவானக்கானகத்தில் ஆரோபுலம்புவது
ஆரோபுலம்புவது அறியவேவேணுமென்று
பூவையழுகிறதைப் போய்ப்பார்க்கவேணுமென்று
அப்போது நல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
கருநாயைக்கொடுத்துக் காவலரைப்போகவிட்டான்
செந்நாயைக்கொடுத்துச் சேவகரைப்போகவிட்டான்
அருளாளுமென்னையா அப்படியேநல்லதென்று
நல்லதம்பிதன்னுடனே நாலுலக்ஷஞ்சேவகர்கள்
காலாளுஞ்சேவகருங் கடுகெனவேயோடிவந்து
நல்லதங்காளருகில்வந்து நலமாகவேதுசொல்வார்
கானகத்தில்புலம்புகிற கட்டார்குழலே
வனத்தில்புலம்புகிற வணக்கிளியேநியாரு
ஒண்டித்தனிமையாக ஒருமையாய்த்தானிருந்து
காட்டில்புலம்புகிற காரணத்தைச்சொல்லுமென்றார்

சேவகர்கள் காட்டில் நல்லதங்காளைக் கண்டு அவர்கள் வரலாறு கேட்குதல்

எந்தவூர்தாயாரே எனக்கறியச்சொல்லுமென்றார்
காட்டிலேவந்துநீ கதறிப்புலம்புவதேன்
ஒண்டியாய்த்தானிருந்து ஓங்கியழுவதென்ன
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதுநல்லதங்காள் அர்க்கார்க்கெடுத்துரைப்பாள்

ளர் களும்பேர்களும் உங்களுக்குச்சொல்லனுமா
நலங்களைக்கேட்டுமண்ணே பெண்கொள்ளவந்திரோ
ான்பாடுசொல்லவென்றால் நீலப்பாடுசாயுமண்ணே
ான்பாடுசொன்னுக்கால் எங்கும்நிலவெரிக்கும்
பெண்பாடுசொல்லவென்றால் பொழுதுவிடியுமண்ணு
ான்றுமேநல்லதங்காள் எடுத்துரைப்பாள்சேவகர்கட்கு
அப்போதுகாவலர்கள் அறிவையர்க்குக்கூறலுற்றார்
சொல்லம்மாதாயாரே செவிகொடுத்துக்கேட்போமென
அப்போதுசேவகர்க்கு ஆணங்குகூறலுற்றாள்
ருந்துபிராயமண்ணே அறியாதநாளையிலே
ாயுந்தகப்பனுஞ் செத்துமடிந்தபோது
நடுமிதலையுடனே கட்டிவிட்டமங்கிலியம்
பாவாடைகட்டவொண்ணு பதந்தெரியாநாளையிலே
சிற்றாடைகட்டவொண்ணு சீர்தெரியாநாளையிலே
கட்டிக்கொடுத்தாரண்ணே கடுகவந்தமன்னவர்க்கு
ஒப்பிக்கொடுத்தாரண்ணே உண்டானகாவலர்க்கு
ாலிதரித்தமுதல் தாய்வீடுபோனதில்லை
மாலையிட்டநாள்முதலாய் மற்றொருநாள்வந்ததில்லை
நான்போனநாள்முதலாய் நல்லமழையுமில்லை
பன்னிரண்டொருவருஷம் பாரமழையுமில்லை
நாற்பத்தொருவருஷம் நன்றாகவாழ்ந்திருந்தேன்
வாழும்பெருமையிலே மக்களைப்பெற்றெடுத்தேன்
ஏழுபேர்மக்களை இன்பமாய்ப்பெற்றெடுத்தேன்
பெற்றேன்மக்களைப் பேருண்டாய்வாழ்ந்திருந்தேன்
வளர்த்தேன்மக்களை வாழ்வுண்டாய்வாழ்ந்திருந்தேன்
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே
ாக்காலுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளைத்தோற்றபஞ்சம்
ாலிபறிகொடுத்துத் தனிவழியேநின்றபஞ்சம்
ட்டைபறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்
ாலிதவிரவைத்துத் தங்கமெல்லாம்விற்றுவுண்டேன்
முத்தனையும்விற்றுவுண்டேன் தாங்கமுடியவில்லை
ாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றேன்
பொறுக்கமுடியாமல்பிறந்திடம்போறேனென்றேன்
ஆண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றேன்

என்றவுரைகேட்டு இயலானசேவகர்கள்
வந்ததேபோதுமம்மா மனக்கவலைதீர்ந்துவிடும்
சுகாய்த்தான்பேரைச் சொல்லுமம்மா ஆரணங்கே
உன்பேரை நாங்கள்கேட்க உத்தமியேசொல்லுமம்மா
அப்போதுநல்லதங்காள் அரிவையும்கூறலுற்றாள்
தாய்பேர் இந்திராணி தகப்பனபேர் இராமலிங்கம்
என்பேர் நல்லதங்காள் என் அண்ணன்பேர் நல்லதம்பி
என்றுமவளுரைக்க இயலானநல்லதம்பி

நல்லதம்பி தங்கையைக் கண்டு பரதவித்தல்

ஆனைவிட்டுத்தானும் அண்ணன்குதித்திறங்கி
குதிரைவிட்டுத்தானும் கொப்பெனவேதானிறங்கி
கட்டியழுதானே கடலிலைந்தபாவனைபோல்
தாவியழுதானே தங்கைமடிமீதில்
கட்டியழுதமன்னன் கனைதெளிந்தபிற்பாடு
கண்ணுட்டிபெற்றசெல்லம் கால்நடையாய்வந்ததேன்
கால்நடையாய்வரக் காரணமோஎன்பிறப்பே
ஆனையரிதாச்சோ ஆண்டிருந்தசீமையிலே
குதிரையரிதாச்சோ குடியிருந்தசீமையிலே
ஒட்டையரிதாச்சோ உன்னுடையசீமையிலே
பல்லக்குப்பஞ்சமோதான் பைங்கிளியாளேறிவர
பாங்கிமார்பஞ்சமோதான் பத்தினியேவுந்தனுக்கு
பாலால்குறைவுண்டோ பாக்கியத்தால்தாழ்வுண்டோ
சாலால்குறைவுண்டோ சம்பத்தால்தாழ்சசியுண்டோ
எத்தால்குறைச்சலம்மா என்பிறவியிங்குவர
ஓலைகிடையாதோ உத்தமனார்சீமையிலே
ஓலையெழுதியல்லோ உத்தமியேயனுப்பிவைத்தால்
ஓலைகண்ட நாழிகையில் ஓடிவந்துபாரேனோ
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
நீ-நினைத்தபிரகாரம் நான்வருவேன்தங்கையரே
கால்நடையாயிங்குவரக் காரணமோயென்பிறப்பே
என்பிறப்பேவீட்டுக்கு ஏகுமம்மா நான் வருவேன்
பாலகர்விளையாடப் புள்ளிமான்கொண்டுவாறேன்
மைந்தர்விளையாட மான்வேட்டையாடிவாறேன்
தென்னண்டைவாடையில் தேங்காய்குவித்திருக்கும்

வடவண்டைவாடையிலே மாங்காய்குவித்திருக்கும்
பின்னேயும்நீயுமாய்ப் போங்களம்மாதங்கையரே
உன்னைக்கண்டவுடனவளும் கடுகச்சமைத்திடுவாள்
வீட்டுக்குப்போயிருநீ வேட்டையாடிவாறேனென்றான்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்

நல்ல தம்பி நல்லதங்காளைத் தன் வீட்டுக்குஅனுப்புதல்

அண்ணுவே அண்ணுவே ஆணழகா சொல்லுகிறேன்
வாசலறியேனப்பா வளவுகுறிப்பறியேன்
கோவிலறியேனப்பா குறிப்பறியேன்கொற்றவனே
அடையாளங்கூறுமென்றாள் அரிவையிளங்கொடியும்
மூன்றுகதவிருக்கும் மேதாங்கிப்பூட்டிருக்கும்
புறக்கடைவாசலிலே பொன்னின்கதவிருக்கும்
தலைக்கடைவாசலிலே தங்கக்கதவிருக்கும்
நாலுகதவிருக்கும் நாதாங்கிப்பூட்டிருக்கும்
காராம்பசுவுமுண்டு கட்டமுகிவாசலிலே
காட்டானைவாசலிலே கட்டியிருக்குதம்மா
அதுவே அடையாளம் அம்மணியேபோமென்றான்
உத்தமியேவீட்டுக்குப்போ யுன்பிறகேநான்வருவேன்
போயிரும்தங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவையுமேதுசொல்வாள்
அண்ணுவே அண்ணுவே ஆணழகா கூறுவேன்கேள்
மாதாயிருந்தாலும் வாவென்றுதானழைப்பாள்
தாயற்றுபோதேயண்ணு தயவற்றுப்போகலையோ
அப்பனற்றபோதேயண்ணு ஆதாவுபோகலையா
மூளியலங்காரி மூருங்குழலாளண்ணியம்மாள்
வாவென்றழைப்பாளோ வரிசையிட்டுப்பாராளோ
ஏனென்றுகேட்பாளோ ஏறமுகம்பார்ப்பாளோ
அண்ணாருகிருந்தால் அருமைகள்மெத்தவுண்டு
என்பிறவிநீயிருந்தால் எனக்குமெத்தச்சொந்தமுண்டு
நீயில்லாமாளிகையில் நான்போகலாகாது [ள்
அண்ணனில்லாவீட்டில் அடியெடுத்துவையேனென்று
அத்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
தாயேஉன்னைவளர்த்த தாதியிருக்கையிலே

அண்ணனுடபெண்சாதி ஆத்தாளிருக்கையில்
உடற்பிறப்பேவீட்டுக்குப்போ உன்பிறகேவருவேன்
போயிரம்மாதங்கையமே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவைதுரிதமுடன்
நல்லதுஎன்றுசொல்லி நடந்தாளேநாயகியாள்
காடுமலைதாண்டிக் கடுகவேநடக்கலுற்றாள்
பிள்ளைகளைப்பின்னடத்திப் போகிறாள்நடுத்தெருவே
மைந்தர்களைப்பின்னடத்திப் போனாள்கடைத்தெருவே

மூளியலங்காரி நல்லதங்காள் வருவதைக் கண்டு தன் ஆபரணமெல்லாம் பத்திரப்படுத்துதல்

அப்போதுநல்லதம்பி ஆணழகன்தேவியரும்
உப்பரிகைமீதேற் உலாவுகையில்கண்டுவிட்டாள்
கண்டாளேகண்டாளே கண்ணாத்தியரை
கண்டுஇடிவிழுந்தாள் கட்டாணியப்போது
பார்த்துஇடிவிழுந்தாள் பாவியந்தச்சண்டாளி
தாதிகளைமூப்பிகளைத் தந்திரமாய்த்தானழைத்து
ஆரடிகாதிகளே அரைக்ஷணத்தில்நீங்களிப்போ
தென்னண்டைமூலையிலே தேரோடும்வீதியிலே
வடவண்டைவீதியிலே வருகிறவளாரடிதான்
வருகிறவளாரடிதான் மாதரேபாருமென்றாள்
அப்போதுகாதியர்கள் அரிவையர்களோடிவந்து
தெருவீதிதன்னில்வந்து சேடியரும்பார்க்கலுற்றார்
பார்த்துமேயோடிவந்து பாவையர்களேதுரைப்பார்
மனையிற்பிறந்தபெண்ணு மகாராசிவாராளம்மா
அப்போதுமூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
இவளிருக்குஞ்சீமையிலே இக்காலங்கரும்புமுண்டு
நானிருக்குஞ்சீமையிலே நாயகமேவன்வருவாள்
சீமைகளைப்பூமிகளைச் சீர்கொள்ளவாராளே
என்வாழ்வைப்பறிக்கவல்லோ வாராளேசக்களத்தி
காடுகரைகளெல்லாங் கைகொள்ளவாராளோடி
என்குடிக்குத்தீங்கு ல்வக்கஎங்கிருந்துவாராளோடி
பொன்னுபரணமெல்லாம் போட்டழிக்கவாராளோடி
தங்கப்பணிதியெல்லாம் தான்தரிக்கவாராளோடி
தென்னண்டைகண்டானல் தெருக்கதவைச்சாத்திவி

வடவண்டைக்கண்டீரானல் வலக்கதவைச்சாற்றி விடு
மூளியலங்காரி மூதேவிசொற்படிக்குத்
தாதிகளப்போது சாற்றிக்கதவடைத்தார்
இறுத்திக்கதவடைத்தாள் ஈரமண்போட்டடைத்தாள்
பானையின்சாதமெல்லாம் பதனப்படுத்திவிட்டாள்
மூளியலங்காரி மூதேவியேதுசெய்தாள் [ள்
பட்டைக்கழற்றிவைத்துப் பாடகத்தைவாங்கிவைத்தா
சேலைகளைந்துமவள் சிறுவர்ணப்பெட்டியில்வைத்தாள்
இட்டபணிதியெல்லாம் பெட்டியில்கழற்றிவைத்தாள்
பழந்துணிகந்தைகளைப் பாவியவள்கட்டிக்கொண்டாள்
முகத்திலேபற்றுமிட்டு மூலையிலேபள்ளிகொண்டாள்
வாசற்படியெதிரே மங்கையரும்பள்ளிகொண்டாள்

நல்லதங்காள் அண்ணன் வீடு சேர்தல்

அப்போது நல்லதங்காள் அறிவையிளங்கொடியும்
நாத்தினர்தன்மனையில் நாயகியும்வந்துநின்று
கதவைத்தட்டியவள் காரிகையும்நாயகியும்
நின்றுள் ஒருசாமம் நேரிழையாளப்போது
நான்பேசாத அண்ணியுடன் பேசவேணுமென்று
அப்போது நல்லதங்காள் அறிவையிளங்கொடியும்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணன் அரண்மனையை ஆளவந்தமதனியரே
அடி-காலுங்கடுக்குதண்ணி கச்சட்டைநோகுதண்ணி
நின்றகால்சோருதடி நிலையுங்கடுக்குதண்ணி
கதவைத்திறவாயோ கண்ணுட்டியண்ணியரே
என்றுமவள்கூறி இளங்கொடியாள்நிற்கையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எண்ணுதஎண்ணம் எண்ணியவள்பள்ளிகொண்டாள்
ஏழுபிள்ளைபெற்றவள் இளங்கொடியேதுசெய்தாள்
கதவருகில்வந்துநின்று கடவுளைக்கைதொழுது
அண்ணி-பத்தரையுங்கட்டி பாங்காய்வளர்த்தபிள்ளை
எட்டரையுங்கட்டியல்லோ இயலாய்வளர்த்தபிள்ளை
பாலமுதுசோறு பங்கிட்டுநான்வளர்த்தேன்
நெய்யமுதுசோறு நேர்த்தியாய்வளர்த்தபிள்ளை
கத்தரிக்காய்போலேயெண்ணி கதறுதடிபாலரெல்லாம்

வெள்ளரிக்காய்போலேயண்ணி வெப்புதடிபாலரெல்லா
தண்ணீர் தண்ணீரென்று தவிக்குதடிபாலரெல்லாம் [ம்
அன்னமென்றுசொல்லி அலையுதடிமக்களெல்லாம்
புத்திரர்பசியாறப் புத்திகளைச்சொல்லுமண்ணி
மனதுமிரங்கலையோ மாபாவியண்ணியென்றாள்
இரங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மைந்தர்பசியாற வார்த்தைகளைச்சொல்லுமண்ணி
என்னைப்பார்க்காவிட்டாலும் பிள்ளைகளைப்பாருமண்ணி
மூத்தானவாய்திறந்து உத்தாரந்தாருமண்ணி
வாயைத்திறந்தாக்கால் வாய்முத்துசிந்துமோதான்
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோதான்
தங்கமுதிர்ந்துமண்ணி தடுமாறிப்போமே
என்னோமட்டுமண்ணி இதம்பாடிநிற்பேனோ
தாளைத்திறந்தாக்கால் தங்கமுருகுமோதான்
வாயைத்திறந்துநீயும் மறுவார்த்தைச்சொல்லுமண்ணி
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இரங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
கவிழ்ந்துதிருமுகத்தைக் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

நல்லதங்காளின் சாபத்தால் கதவு திறக்கப்பட்டது

அப்போதுநல்லதங்காள் ஆணங்குவதுசெய்தாள்
பத்தினியும்நானானால் பத்தாவும் அவரானால்
உத்தமியும்நானானால் ஒருநூல்கழுத்தியானால்
தாழ்பூட்டுசங்கலியும் தானே திறக்கவேண்டும்
தானே திறக்கவேணும் தாய்வீட்டுப்பொற்கதவு
பத்தினியாள்வாக்குப் பலித்துதானப்போது
உத்தமியாள்சொல்லையிலே உடனே திறந்திடுமாம்
உட்கட்டுக்கதவுகள்தான் உடனேதிறந்ததப்போ
கதவுகள்திறந்தவுடன் கட்டழகிநல்லதங்காள்
முன்வைத்தகாலையங்கு பின்வைத்துத்தானுழைந்தாள்
ஆக்குமடப்பள்ளியும் அடங்கலும்சுற்றிவந்தாள்
எங்கேசுற்றிவந்தாலும் ஏதொருபண்டமில்லை

மூளியலங்காரி மூதேவிவீற்றிருக்கும்
கூடத்திலேகனிகள் கொட்டியிருக்குதங்கே
அண்ணியர்முன் வந்து அருங்கிளியாள் நிற்கையில்
பெருமையாய் நல்லதங்காள் பெற்றெடுத்தபிள்ளைகளில்
அதிலேஒருபிள்ளை அக்கனியிலொன்றெடுக்க
மற்றுமொருபிள்ளை மாங்காய்யெடுத்திடுமாம்
தென்னண்டையோடி தேங்காய்யெடுத்திடுமாம்
அப்போதுகண்டாளே அண்ணனுடதேவியரும்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
திட்டென்றெழுந்திருந்து தீவிரம்மாய்க்கைமுறித்தாள்
ஓட்டமாய்ஓடிவந்து ஓரறைதான்கொடுத்தாள்
மாங்காயைத்தான் திருகி மாங்காயுடன்போட்டாள்
தேங்காயைத்தான் திருகி தேங்காயுடன்போட்டாள்
ஆயிரம் தேங்காயிலே அழுகல்காய்கைக்கொடுத்தாள்
அப்போது நல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
கண்ணுளன்பெற்றெடுத்த கற்கண்டேசர்க்கரையே
என்கொழுநன்பெற்றெடுத்த இரத்தினசிகாமணியே
காலமழையில்லாமல் கழனிவிளையாமல்
தேதிமழையில்லாமல் செந்நெல்விளையாமல்
பயிர்கள்விளையாமல் பஞ்சங்கள்வந்ததினால்
பர்த்தாசொற்கேட்காமல் படுபாவிவந்தேன்
மாமன்மாளிகையில் மாங்காயைத்தின்றீர்
தேங்காயைத்தின்றீர் சிறுவரென்மைந்தர்களே
மாங்காயுந்தேங்காயும் மக்களேதின்றீர்
வாருங்கள்மக்களென்று மடியிலேதூக்கிவைத்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதங்காள்தனக்கும் நாயகியாள்பிள்ளைகட்கும்
பன்னிரண்டுவருஷம் பஞ்சடைந்தகேழ்வரகை
சில்லியைந்துபானையில் இல்லையென்றுலைவைத்தாள்
ஓட்டைத்திருகையெடுத் தொன்றிரண்டாமாவாக்கி
வாசலிலேநிற்குமந்த வாழைமரந்தான்பிளந்து
ஈனுதவாழை இளவாழைத்தண்டொடித்து
வாழைமரம்பிளந்து வைத்தாளடுப்பிலேதான்
ஊதுகிறாள்பாவி ஒருவாய்புகைகிளம்ப



சிந்தினாள்மூக்கையங்கே திருக்கண்சிவந்திடவே
அப்போது நல்லதங்காள் ஆரணங்குகூறலுற்றாள்
நம்முடைய அண்ணிக்கு நம்மால்வருத்தமென்ன
மூளியலங்காரிமூதேவிசண்டாளி
இந்தவருத்தங்க இப்படியாநேர்வதென்ன
என்றுமே நல்லதங்காள் எடுத்துரைப்பாளக்கினிக்கு
நான்பத்தினியுமானால் பற்றியெரியவேண்டும்
உத்தமியுமானால் ஓங்கிபெரியவேண்டும்
கூழுங்கொதிக்கவேணும் குழந்தைபசியாறவேணும்
என்று-பத்தினியாள்சொல்லையிலே பற்றியெரியதங்கே
கொம்பனையாள்சொல்லையிலே கூழுங்கொதித்திடுது
அப்போது நல்லதங்காளண்ணியருக்கேதுரைப்பாள்
காய்கிறகூழானாலும் கட்டமுகிவார்க்காயோ
கொதிக்கிறகூழதனைக் கொடுப்பாயோமதனியென்றாள்
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தைபிறைகண்டேனானால் தரையிலிறக்குவண்டி
மாசிபிறைகண்டேனானால் மாதேஇறக்குவண்டி
மூப்பிறைகண்டேனானால் மூன்றாலிறக்குவண்டி
மைந்தருக்குமுந்தனுக்கும் வார்ப்பேண்டி கூழதனை
இருந்தாலிருமென்றாள் நடந்தால்நடவுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகுள்ள நல்லதங்காள்
மங்கைமனதுநொந்து மதிமுகம்வேறுபட்டு
உள்ளமனமெரிய உத்தமியாளேதுசொல்வாள்
குழந்தைகுடிக்கக்கொஞ்சம் கூழுஞ்சமோதான்
மக்கள்குடிக்கக்கூழ் மண்டலத்தில்கிட்டாதோ
இரக்கப்புறப்பட்டால் எங்கேயும்கிட்டாதோ
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
வைத்துவிளையாட மச்சினிமார்மெத்தவுண்டு
கூடிவிளையாடக் குழந்தைமார்மெத்தவுண்டு
ஓப்பாரியுறன்முறையார் உண்டுபலபேர்கள்
பாட்டன்வீடுபோய்நாம் பாலமிர்தமுண்ணலாமே
தாய்வீடுபோனாலும் தயிர்ச்சாதமுண்ணலாமே
அண்ணன்வீடுபோனாலும் நாம் ஆலித்திருக்கலாமே
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
அண்டைவீட்டுப்பெண்களா அசலாத்து அப்பியரே

தண்ணீருக்குப்போனதொரு தாய்மாரேபெண்டுகளா
என்- அண்ணியார்செய்த அனியாயங்கேட்டீர்களா
மதனியார்செய்ததொரு மரியாதைபார்த்தீர்களா
அண்ணனார் வந்தபின்பு அறிந்ததைக்கூறுமென்றாள்
தமையனார்வந்தபின்பு தாய்மாரேசொல்லுமென்றாள்
அந்தச்சொற்கேட்டிருந்த அரிவைமாரெல்லோரும்
நல்லதங்காளைப்பார்த்து நலமாகயேதுசொல்வார்
எந்தனிட வீட்டுக்கு எழுந்துவா நல்லதங்காள்
அவரவர்கள்தன்வீட்டுக் கழைத்தார்களெல்லோரும்
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைக்கோபமென்ன
பச்சரிசிகுத்தித்தாரோம் பாலுங்கறந்துதாரோம்
பாலரும்நீயுமாய்ப் பசியாறிப்போங்களென்றார்
அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அண்டைவீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே
அசல்வீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே
அண்ணனார்வந்தபின்பு அருஞ்சேதிகூறுமென்றாள்
அப்போபெண்களெல்லா மதிகமாயெடுத்துரைப்பார்
ஏனம்மா தங்கையரே இத்தனைக்கோபமென்ன

நல்லதங்காள் காட்டுக்குப் போகும்போது கணையாழி மோதிரத்தையும் ஆவாரந் தழையையும் அடையாளமாகப் போட்டு வைத்தல்

கோபம்பொறுக்காமல் கொல்லைவழிதானடந்தாள்
ஆவாரஞ்செடிஒடித்து அடையாளம்போடலுற்றாள்
கொன்றைத்தழைஒடித்துக் கொடிவழியேபோடலுற்றா
கணையாழிமோதிரத்தைக் கழற்றியேபோடலுற்றாள் [ள்
அத்துவானக்கானகத்தில் ஆணங்குபோய்நடந்தாள்
காட்டானைவனத்திலே கன்னிநடக்கலுற்றாள்
வாருமடாமக்களா வரிசையாயென்பிறகே
பாட்டனார்வைத்ததொரு பழஞ்சோலைபார்த்தழுதாள்
ஆத்தாளும்வைத்ததொரு அழகுசோலைபார்த்தழுதாள்
குந்திக்கொண்டேநான் குடங்கொண்டுநீர்சொரிந்தேன்
குடங்கொண்டுநீர்சொரிந்த கொம்புகளாயிப்போது
பாவிவருவேனென்று பாலைப்பூபார்த்தீர்களோ

தோஷிவருவேனென்று துக்கமற்றுக்காய்த்திர்களோ
வாருங்கன்மக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லிநல்லதங்காள் இயலாயுமைக்கையிலே
தண்ணீரென்றுசொல்லித் தவிக்குதுபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதுபாலரெல்லாம்
காரைப்பழம்பறித்துக் கொடுத்தாளே மக்களுக்குச்
சூரைப்பழம்பறித்து இட்டாளேமக்களுக்குத்
தொரட்டிப்பழம்பறித்துத் தூங்காதேமக்களென்று
கானலுறைக்குதென்று கையால்குடைபிடித்தாள்
என்னருமைமக்களா என்பிறகேவாருமென
அந்தவனந்தாண்டி யடுத்தவனம்போவோமென்றாள்
அப்போது நல்லதங்கா ளரிவையருமெண்ணலுற்றாள்
உற்றுநினைத்தாளே ஒருகோடியோசனையைப்
பத்தாவின்வார்த்தைதள்ளிப் பதறிநடந்தோமே
கணவனிடவார்த்தையுதை கடந்துநடந்தோமே
எங்கேயோவானம் இடித்ததுஎன்றுநானிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலிடித்ததென்றாள்
ஆகாயவானமது அதிரவிழுந்ததுவே
எண்ணறவாசித்து எழுத்தறக்கற்றாலும்
பெண்புத்தியாலல்லோ பிழைமோசம்வந்ததென்றாள்
சதிகாரப்பாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
பழிகார அண்ணனைநான் பலமென்றுநம்பிவந்தேன்
இந்தவுடலோடே இனித்திரும்பிப்போவோமானல்
பலருஞ்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசிடுவார்
சதுரோர்சிரிப்பார்கள் சரியொத்தோரேசுவார்கள்
இந்தவுடலோடே இனியிருக்கலாகாது
மாண்டுமடிவோமென்று மங்கைமனந்தெளிந்து
செத்துமடிவோமென்று சேயிழைமனந்துணிந்து
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லிநல்லதங்கா ளியலாகவழிநடந்தாள்
அவள்• அவ்வனம்கடந்து அப்புறம்போகலுற்றாள்
வேறேயொருகானகத்தில் மெல்லியரும்வந்துநின்று
கானகத்தில்பலசிறுவர் காராவவமேய்த்திருந்தார்
மாடுமேய்க்கும்பிள்ளைகட்கு மகாராசியேதுசொல்வாள்

நல்லதங்காள் இடையரைப் பாழுங்கிணறு இருக்குமிடம் கேட்டல்

மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாஞ்சிறுதம்பியரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா அறியாதபாலகரே
பச்சரிசிநான்தாரேன் பால்தாரேனுங்களுக்கு
கச்சாயம்நான்தாரேன் கண்ணுட்டிமக்களென்றாள்
பாழுங்கிணறென்று பார்க்கிலையோதம்பியரே
இருண்டகிணறென்று காண்கிலையோதம்பியரே
அப்போதுமாட்டிடையர் அறிவாளரேதுசொல்வார்
பாழுங்கிணறுனக்கேன் பத்தினியேசொல்லுமென்றார்
இருண்டகிணறுனக்கேன் என்தாயேகூறுமென்றார்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
தண்ணீரின்தாகமப்பா தற்காலமிப்போது
தண்ணீர்குடிக்கவேணுந் தாகவிடாய்தீரவேணும்
கட்டமுதுண்ணவேணும் களையாறவேணுமென்றாள்
அப்போது ஆட்டிடைய ரரிவையாக்கேதுசொல்வார்
அறுகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ளபாழ்கிணறு
கோவைபடர்ந்திருக்கும் கொடிதானபாழ்கிணறு
எதிரே இருக்குதம்மா ஏற்றமுள்ளபாழ்கிணறு
என்றுமேசொன்னபின்பு ஏந்திழைநல்லதங்காள்
அந்தவிடங்கடந்து அரிவையரும்வாராளே
பாழுங்கிணற்றருகே பத்தினியாள்வந்துநின்று
இருண்டகிணற்றருகே யிளங்கொடியாள்வந்துநின்று
மைந்தரைப்பார்த்துமல்லோ மங்கையுமேதுரைப்பாள்
பாழுங்கிணற்றைப்பார்த்துப் பாலகரேநீர்பயந்து
இருண்டகிணற்றினிற்றள்ள எடுத்துவளர்த்திட்டேனே
மாளவோயிங்குவந்தாய் மாபாவிபட்டணத்தில்
மன்னவர்கேட்டுவிட்டால் மாண்டுமடிந்திடுவார்
கொற்றவர்கேட்டாக்கால் கூடமடிந்திடுவார்
அப்போத நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
அண்ணன்கொடுத்த பட்டாடைமடித்துவைப்பாள்
அண்ணியார்கொடுத்த தேங்காயைமேலேவைத்தாள்
பாலூட்டும்பாலாடை பத்தினியாளங்குவைத்தாள்
மோர்குடிக்கும்பாத்திரம் முருகுழலங்கேவைத்தாள்

தாமரையிலைக்கிள்ளித் தாலிகழற்றுவைத்தாள்
மாவிலைகிள்ளியல்லோ மங்கிலியம் வாங்கிவைத்தாள்
அப்போது நல்லதங்காள் அரிவையுமே தான்சொல்வாள்
மங்கிலியமிவ்விடத்தில் மலையாய்ச்சமையவேணும்
ஓங்கிவளரவேணும் ஒருகல்லாச்சமையவேணும்
கானகத்திலேவளர்ந்து கல்லாச்சமையவேணும்
பத்தினியாள் சொல்லையிலே பாராங்கல்லாகினதாம்
உத்தமியாள் சொல்லையிலே ஒருகல்லாய்நின்றதங்கே

நல்லதங்காளும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்து இறத்தல்

அப்போது நல்லதங்காள் அறிவையிளங்கொடியும்
மாளுகிறேனென்றுகூறி மலையேறி நமஸ்கரித்தாள்
சுத்திவலம்வந்து சூரியனை நமஸ்கரித்தாள்
தெண்டனிட்டபிற்பாடு தெரிவைவளங்கொடியும்
ஒவ்வொருமக்களாய்த் தள்ளினாள் கங்கையிலே
ஐந்துபிள்ளை ஒருபெண்ணை யடுக்காகத்தள்ளிவிட்டாள்
அப்போது தாய்க்குத்தலைமகனும் தானுகலோடினனும்
ஓடியதலைமகனும் உத்தமிக்கே துரைப்பான்
தாயேநீ நல்லதங்கா தயவாகக்கேளுமம்மா
தப்பிப்பிழைத்திடுவேன் தாயார்பேர் சொல்லுகிறேன்
ஓடிப்பிழைத்திடுவேன் உன்பேரைச்சொல்லுகிறேன்
என்னுந்தண்ணீரும் இறைத்துவருவேனம்மா
திங்களதிவசங்கள் செய்துவருவேனம்மா
என்னைத்தான் கொல்லாதே என்னைப்பெற்றமாதாவே
ஒருபிள்ளை பெற்று உலகத்தையாளலையோ
ஏழுபிள்ளைபெற்று ஏழைமதியானையம்மா
மாடுமேய்த்துக்கஞ்சி குடிப்பேனே மாதாவே
என்னைமட்டும்கொல்லாதே என்னைப்பெற்றமாதாவே
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம்
அப்போது நல்லதங்காள் அறிவையெடுத்துரைப்பாள்
அறுவர்கள் தன்னுயிர்க்கும் அதிகமோ நம்முயிர்தான்
நாம்ஓடிப்பிழைத்தாலும் ஒருவரில்லையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்
கண்டோர்சிரிப்பார்கள் காசினியோரேசுவார்கள்

பார்த்தோர்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
வல்லோர்சிரிப்பார்கள் வாயிலுள்ளோரேசுவார்கள்
வாடாயப்பாஎன்மகனே கூடயிறந்திடுவோம்
என்றுமேநல்லதங்கா ளிடையரைத்தானழைத்துக்
கூடிப்பிடியுமென்ருள் கொற்றவனூர் தன்மகனே
ஓடிப்பிடியுமென்று ளுத்தமியாள் தன்மகனே
கொச்சியிடையரெல்லாம் கூடிப்பிடித்துவந்தார்
வந்தோர்பிள்ளையைத் தள்ளினுள்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பார்ப்பாருடையுடுத்திப் பத்தினியாள்நல்லதங்காள்
தானுஞ்சலியாமல் தண்ணீரில்போய்விழுந்தாள்
அப்போதுகங்காதேவி மூன்றுபிழைபொறுத்தாள்
மூன்றுபிழைபொறுத்து மூக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்த்தவளையைப்போல் தானும்மிதக்கலுற்றுள்
பச்சைக்கிளிபோல் பறக்கிருள்பாழ்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமது
அறுபதாங்கூந்தல் அலையுதுகங்கையிலே
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே
வேட்டைக்குப்போயிருந்த விருதுள்ளராஜனுக்குத்
தோள்கள் துடிக்கிறதும் துர்குறிநேருவதும்
இயலானகண்களுக்கு ஈவந்தடிக்கிறதும்
ஆடுந்துடைகளெல்லாம் அப்போதிறந்திடுமாம்
பட்டத்துயானையங்கே பதறிக்கவிழ்ந்திடுமாம்
யானையுஞ்சேனையும் அத்தனையும்தான்மடிந்து
குதிரைப்பரிவாரம் கோடிதளம்தானிறந்து
இப்படியாக இடறுகள்நேர்ந்ததங்கே
ஒற்றைநாய்தன்னுடன் உளம்நைந்துவீடுசேர்ந்தான்

மூளியலங்காரி தன் கணவனுக்குக் கள்ள உபசரணை செய்தல்

அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
பர்த்தாவுக்குபசாரணை பைங்கிளியும்செய்யலுற்ருள்
செண்டில்தண்ணீரும் கொண்டுவந்தாள்பன்னீரும்
பன்னீரால்கால்கழுவிப் பட்டாலடிதுவட்டி

சரணஞ்சரணமென்று சாய்த்தாள் திருமுடியை
பாதஞ்சரணமென்று பத்தாவை தெண்டனிட்டாள்
தண்ணீர்குடியும்பத்தா விடாயாற்றிக்கொள்ளும்பத்தா
வெந்நீர்குடியும் விடாயாற்றிக்கொள்ளுமென்றாள்
அப்போது நல்லதம்பி அவளுக்கெடுத்துரைப்பான்
மூளியலங்காரி மூதேவிக்கெடுத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேனடி தாகவிடாயாற்றிக்கொள்வேன்
நல்லதென்னுடன்பிறந்த நல்லதங்காள் நாயகியை
காட்டிலேகண்டுநான் வீட்டுக்கனுப்பிவைத்தேன்
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயென்றான்
என்பிறப்புநல்லதங்காள் இங்குவந்தாளெங்கேயடி
என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாள் நாயகியாள்
கண்டதுகண்டாற்போல் கணவர்க்கெடுத்துரைப்பாள்
வாந்தாள் விருந்தாள் வண்ணப்பாய்போட்டேன்பத்தா
மக்களுடனேவந்த வரவைக்கண்டுநானப்போ
கால்கண்டதோத்திலே கடுகவுலையும்வைத்தேன்
மூணுமுறியாப்பச்சரிசி மலைபோல்நான்சமைத்தேன்
வாழைக்காயறுத்தேன் வழுதலங்காய்காம்பறிந்தேன்
ஈரப்பலாக்காயை இளமுள்ளுபோக்கடித்தேன்
கத்தரிக்காய்கொய்தேன் கருணைக்குழம்புவைத்தேன்
முள்ளிக்காய்கொய்தேன் முருங்கைக்காய்சமைத்தேன்
பத்துவிதக்கறியும் பாங்கானபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
அடுக்காய்கறிகள் அன்பாகநான்சமைத்தேன்
உன்னுடன்தான்பிறந்த உத்தமியாள் நாயகிக்கும்
ஏழுபிள்ளைதனக்கும் இளங்கொடியாள் நாயகிக்கும்
பெரியகலமெடுத்தேன் பிள்ளைகட்குச்சோறுமிட்டேன்
சின்னக்கலமெடுத்தேன் சிற்றடிக்குச்சோறுமிட்டேன்
சுத்திக்கறிவைத்தேன் சொம்புதயிர் முன்வைத்தேன்
அள்ளிப்பருப்புமிட்டு அதுகண்டநெய்சொரிந்தேன்
உண்ணுங்களென்று உபசாரணைசெய்துநின்றேன்
தின்னுங்களென்றுகூறித் தெருவாசல்காத்திருந்தேன்
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
உண்டுபசியாறி உட்கட்டில்வீற்றிருந்தாள்

அரிபிசுவுவெற்றிலையும் அள்ளியேநான்கொடுத்தேன்
தாம்பூலந்தான்தரித்துத் தயவாகநல்லதங்காள்
சொக்கட்டானசதுரங்கந் தோகையருந்தாளுடி
காற்றடிக்கும்மண்டபத்தில் காரிழைவீற்றிருந்தாள்
தூக்கம்வருகுதென்றாள் துன்னிளங்கண்ணாளும்
பாங்கியரையழைத்துப பள்ளியறைசோடியென்றேன்
தாமக்குருங்குழலமார் தாதியர்களோடிவந்து
சொர்ணப்பொன்கட்டிலிட்டுச் சோடித்தார்தாதியர்கள்
தங்கப்பொன்கட்டில்மேல்தகுந்தமல்லிப்பூச்சொரிந்தார்
பளிங்குமாமண்டபத்தில பாங்கிமார்விரித்துதறி
கெண்டிகைப்பூபட்டூம் கொண்டுவந்துவைத்தார்கள்
பள்ளிகொள்ளுமெனப் பாவைக்குத்தெண்டனிட்டேன்
அப்போதுநல்லதங்காள் அரிவையெழுந்திருந்து
பஞ்சணைமெத்தையில் பள்ளிகொண்டாள்பாவையாள்
சாதிமணிக்கவரி சந்தனத்தாலூதுவத்தி
கோவையணிக்கவரி குங்குமத்தாலூதுவத்தி
வீசினார்தாதியர்கள் மெல்லியர்க்கிருபுறமும்
கவரிபரிமாறக் கட்டழகிதூங்கினளே
தூங்கினள்மூன்றுசாமம துன்னளங்கண்ணாளும்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியைநானெழுப்ப
தூங்கிமிகத்தெளிந்து துரிதமுடனல்லதங்காள்
என்னையேதானோக்கி இளங்கொடியுமேதுசொல்வாள்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனாண்மனையை ஆளவந்தமதனியரே
நாத்தினரே நாத்தினரே நலமாகஎந்தனக்கு
உண்ணக்கலமில்லையென உத்தமியாள்தானுரைத்தாள்
அப்போநானதானும் அரிவையிளங்கொடிக்கு
எனக்கொருசேலையென இருசேலைநான்கொடுத்தேன்
முத்துவாணைச்சேலையது மூன்றெடுத்துககொடுத்தேன்
பச்சைவர்ணச்சேலையது பத்தாயேநான்கொடுத்தேன்
அழகுமணிகொடுத்தேன் ஆபரணம்கொடுத்தேன்
தங்கப்பணங்கொடுத்தேன் தகுந்தபொருள்கொடுத்தேன்
செலவுக்குஆயிரம்பொன் சிறப்பாகவேகொடுத்தேன்
பாலர்விளையாடப்பாவைகள் நானகொடுத்தேன
சிறுவர்விளையாடச சிங்காரததேர்கொடுத்தேன

மாமிவீடுபோவதற்கு மச்சாதங்கேட்டாள்
ஆளன்வீடுபோவதற்கு அழகாதங்கேட்டாள்
அத்தனையுங்கொடுத்தேன் அன்பானநாத்தியர்க்கு
கேட்டதெல்லாங்கொடுத்தேன் கிளிமொழிமாதற்கு
பாவையிளங்கொடியாள் பத்தினியாள்பாலரெல்லாம்
பாப்பாரவீதியெல்லாம் பந்தாடிவந்தார்கள்
செட்டித்தெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
நீ-கனைத்துவருவாயென்று கடுகக்குடமெடுத்தேன்
தங்கக்குடமெடுத்துத் தண்ணீருக்குப்போயிருத்தேன்
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தா ளின்னவிடம்நானறியேன்
போனவிடம்நானறியேன் போயிருக்குந்தாவறியேன்
பந்தம்பிடித்துபத்தா பலதெருவுந்தேடிவந்தேன்
காடெல்லாந்தேடிவந்தேன் காலிரண்டும்நோகுதிப்போ
ஊரெல்லாந்தேடினேன் உடம்பெல்லாம்நோகுதிப்போ
ஆணுலமுருமன்னு ஆளனேஎந்தனுக்கு
ஒருபானைஜலம்வைத்துத் தருவாயேஎந்தனுக்கு
என்றுசொல்லக்கேட்டுமன்னன் இயலாகநல்லதம்பி
ஆங்காரக்கோபமுடன் ஆனந்தவாழ்மார்பன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவிநல்லதங்காள் எங்கேதான்போனளிப்போ
நீ-இத்தனைசெய்திருந்தா லேன்போறுளென்பிறவீ
நான்- அறிவேனறிவேனு னசாரவார்த்தையெல்லாம்
உன்-காருடவித்தையெல்லாம்கண்டறிவேனிப்போது
போதுமடிவார்த்தை பொற்கொடிகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தால் ஏன்போறுள்நல்லதங்காள்
கொஞ்சவுபசாரம் கூறவந்தாயெந்தனுக்கு
கள்ளவுபசாரம் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்காள் எழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லித்தாளெழுந்தா னியலானநல்லதம்பி
அரண்மனையேழுகட்டும் அந்தபுரந்தாண்டி
தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்வீதி அக்காமாரேதங்கையரே
எதிர்வீட்டுப்பெண்களே என்னைப்பெற்றதாய்மாரே



ஆடிதங்கையரே அசல்வீட்டுத்தமக்கையரே
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவரக்காண்கிலேயோ
ஏழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவரக்காண்கிலேயோ
அசல்வீட்டுத்தங்கைமா ரிவையரெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியார்மாளிகைக்கு
வந்ததேபோதுமப்பா மாபாவிலா சலுக்கு
அவள்-பண்ணுதகோலமெல்லாம் பண்ணினளுன்தேவி
வந்தவுடனேயவள் வாசல்கதவடைத்தாள்
ஓடிக்கதவடைத்து ஒருமட்டாய்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்துத் தாழ்பூட்டிமண்ணறைந்தாள்
ஈரமண்கொண்டுவந்து இருபக்கம்மண்ணறைந்தாள்
குழந்தைகுடிப்பதற்குக் கூழ்கிடையாதென்றாள்
பசியதுதான் தணிய பச்சைஜலமில்லையென்றாள்
களைகள் தெளிவதற்குக் கரண்டிஜலமில்லையென்றாள்
செய்யாதகோலமெல்லாம் செய்துவைத்தாளுன்தேவி
கவிழ்ந்ததிருமுகத்தைக் கண்ணாலேபாரேனென்றாள்
பண்ணுதகோலமெல்லாம் பண்ணினளுந்தேவி
கொன்றைகள்வைத்திருக்கும் கொணுதசாலைவழி
அருமைமக்களெழுவருட னகத்தான்போனள்
போனதோர்சேதிதன்னை போர்மன்னன் தானறிந்து
தங்கையும்போறவழி தானுமறியவில்லை
என்றுமேநல்லதம்பி இயல்பாகவேதுசொல்வான்
கன்னிநல்லதங்கையை நான்காட்டிலேகண்டழுதேன்
வீட்டுக்குவந்ததொரு மெல்லியரை நானறியேன்
ஏதேதுசெய்தாளோ என்னுடையபெண்சாதி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மருந்துவைத்தாளோ மாயமாய்பொடிபோட்டாளோ
ஈடுதான்வைத்தாளோ என்னவகைசெய்தாளோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானினைந்து

நல்லதம்பி நல்லதங்காளை காட்டில் தேடுதல்

அப்போ-ஒற்றைநாயோடல்லோ ஓடுகிறான் நல்லதம்பி
ஓட்டமாயோடும்போது உத்தமனார்வீரியத்திற்கு
மீசைதுடித்திடுமாம் வெகுகோபம்வந்திடுமாம்
கண்கள் சிவந்திடுமாம்காத்தாளம்வந்திடுமாம்

பக்கச்சலைதகளெல்லாம் பம்பாம்போல் துடிக்கும்
ஆடுந்தொடைகளெல்லாம் அம்பாய்ப்பறந்திடுமாம்
ஆவாரங்கொத்ததனை அடையாளம் தான்பிடித்தான்
கணையாழிமோதிரத்தை கண்டுமேதானெடுத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயலாகத்தானினைப்பான்
இந்தவழியில்தானே இவளுமிருக்கவேண்டும்
என்றுமேகுதிரைவிட்டான் இன்பமாய் நல்லதம்பி
குதிரைவிடும்போது கொற்றவனுமேதுசொல்வான்
மாடுமேய்க்குந்தம்பியரே மாட்டாஞ்சிறுபாலகரே
என்பிறப்புதங்கையவளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
அப்போதுமாட்டிடையர் அறியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்கருலமென்றறியோ முடன்பிறப்பென்றறியோம்
இருட்டுக்கிணறொன்று எந்திழைகேட்டாளே
காட்டிக்கொடுத்தோமையா காரிழையாள் நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையில் அன்பான நல்லதம்பி
நீங்கள்-காட்டித்தரலாமா கடக்கப்போய்நிற்கலாமா
பார்த்துமிருந்தீர்களா பழிகாரப்பாவிகளா
எனக்குப்பிறப்பொழிய உமக்குப்பிறப்பல்லவோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானடந்தான்
காடுசெடிகளெல்லாம் கணக்காகத்தேடிவாரான்
ஆறுசுனைகளெல்லாம் ஆங்காங்குத்தேடிவாரான்
குட்டைகுளங்கண்டலே குதித்திறங்கித்தேடிவாரான்
தூரவுகளைக்கண்டாலே துள்ளிக்குதித்திடுவான்
வழியிலிப்படித்தேடி வருகின்றவேளையிலே
நல்லதங்காள்விழுந்த நற்கிணற்றின்முன்வந்தான்
பாலூட்டும்பாலாடை பாவாடையடையாளம்
மங்கிலியம்கண்டானே மன்னனந்தநல்லதம்பி

நல்லதங்காள் கிணற்றில் விழுந்து இறந்ததைக் கண்டு நல்லதம்பி பரிதவித்தல்

அப்போ-பாழ்கிணற்றருகே பார்த்துவயிறெரிந்தான்
இருண்டகிணற்றருகே ஏங்கிமனந்தளர்ந்தான்
தன்தங்கையென்றல்லோ தரையில்புரண்டழுதான்

அம்மாடியென்றல்லோ அடித்துப்புரண்டழுதான்
முத்துபோல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பம்பைமயிரை எல்லாம் பாழ்கிணற்றில்பிச்செறிந்தான்
ஐயோசிவனேயென்று அடித்துப்புரண்டழுதான்
ஓடிக்குதித்தானே உத்தமியாள் கங்கையிலே
தாண்டிக்குதித்தானே தயவானகங்கையிலே
உடற்பிறந்தாள்பிள்ளையெலாம் ஓடியெடுக்கலுற்றான்
தன்பிறப்புப்பிள்ளைகளைத் தாவியெடுக்கலுற்றான்
தங்கையை மெள்ளவல்லோ தடவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகமோடுமுகமணைத்து முத்தமிட்டுக்கொண்டானே
செத்தபிணத்துக்கு சீரிட்டுப்பார்த்தழுதான்
மாண்டபிணத்துக்கு வரிசையிட்டுப்பார்த்தழுதான்
நாவல்பழமோதான் நல்லதங்காள் பெற்றபிள்ளை
கோவைப்பழமோதான் கொம்பனையாள் பெற்றதுவும்
கையொத்தபாலகண்டி கண்ணாட்டிபெற்றபிள்ளை
ஈச்சம்பழமோதான் என்னாச்சிபெற்றபிள்ளை
கைக்கேற்றபாலகன் கண்ணாட்டிபெற்றசெல்வம்
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

நல்லதம்பி நல்லதங்காளையும் பிள்ளைகளையும் தகனஞ்செய்தல்

தங்கையையெடுத்துத் தகனஞ்செய்யவேண்டுமென
ஊதாரிதன்னாலே உடற்பிறப்பைநானிழந்தேன்
மாபாவிதன்னாலே மருமக்களை நானிழந்தேன்
பெண்சாதிதன்னாலே பெண்பிறப்பை நானிழந்தேன்
ஊரில்நெருப்பெடுத்தால் உலகோர்சிரிப்பாரென்று
நாட்டில்விறகுகொண்டால் நல்லார்சிரிப்பாரென்று
சந்தனக்கட்டைகொண்டு சதுராய்ப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையரைத்தான்வளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான்வளர்த்தி
வாப்பேறிநல்லதனை வாய்க்கரிசிபோட்டானதிலே
செண்பகமாலை சிவமாலைவந்திடுமாப்
மல்லிகைமாலைகொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளிதனை வைத்தானேதோகையற்கு

வலம்வந்தழுதுகொள்ளி வைத்தானே நல்லதம்பி
நெருப்பும்பிடிக்கவில்லை நீராய்ச்சமையவில்லை
அக்கினியும்பற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
ஏண்டியம்மா தங்கையரே இத்தனை கோபமென்ன
என்மேலேகோபமது வைககாதேஎன்பிறவி
பற்றியெரிந்தாயானல் பழிகளைவாங்குவேனன்
ஓங்கியெரிந்தாலே உயிர்களைவாங்குவேனன்
நாளைப்பசலுக்கு நான்வாரேன்தங்கையரே
இப்படிச்சொல்லியண்ணன் இரண்டடிதானடந்தான்
நடந்தவன்போனபின்ப நாயகியாளக்கினிதான்
குப்பென்றெழுந்து கொழுந்துவிட்டெறிந்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

நல்லதம்பி நல்லதங்காளைத் தகனஞ்செய்து வீடுவந்து சேர்தல்

நல்லதம்பியிப்போது நலமாகத்தன்மனையில்
எட்டுநாள் துக்கமண்ணன் இயல்பாகச்சிறைகாத்து
அறுகுபொறுக்கியண்ணன் அலாத்தலைமுழுக்கி
மூக்காட்டையிட்டுராசன் மூலையிலேபோய்ப்படுத்தான்
அப்போதுமூளியலங்காரி மூதேவிசண்டாளி
தன்னுடையபத்தினியாள் தன்னெதிரேவந்துநின்று
ஆளன்முகம்நோக்கி ஆணழகியேதுசொல்வாள்
என்காணும்ராஜமன்ன எந்தன்மேற்கோபமென்ன
பொல்லாதங்கையவள் போனலும்போய்ப்போருள்
ஆகாதநல்லதங்காள் அவள்போனல்போருள்காண
நீகாலின்மிதியடியைக் கழட்டிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகள் கூறிடவுமாகாதோ
அப்போதுநல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்குமுனக்கும்பெண்ணே எட்டுமாதவிரதமுண்டு
என்வருத்தந்தொலைந்தால்மாதே நானுண்டிடுவேன்
உனக்குமெனக்கும் ஒருபிள்ளையுண்டல்லவா
நம்முடையபிள்ளைக்கு நலமாகவிப்பொழுது
கலியாணம்செய்யவேணும் கண்குளிரப்பார்க்கவேணும்
கண்ணுள்ளபோதல்லவா கண்காட்சிகாணவேணும்
என்னுமூளியலங்காரி மூதேவிசண்டாளி

மன்னவனார் நல்லதம்பி மர்மந்தொடுத்தானே
கலியாணக்காரியத்தைக் கடுகவேசெய்யவென்று

நல்லதம்பி பிள்ளைக்குக் கலியாணஞ்செய்ய பந்தல் அலங்கரித்தல்

சாந்தால்தரைமெழுகிச் சந்தனத்தால்கோலமிட்டு
கரும்பாலேகால்நிறுத்தி இரும்பாலேபந்தலிட்டார்
முத்தைப்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
பவளத்தைப்பிளந்து பந்தலலங்கரித்து
தேக்குமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்
இட்டார்கள்பந்தலங்கே இருநூற்றுங்காதவழி
தொட்டார்கள்பந்தலங்கே தொண்ணூற்றுங்காதவழி
ஓலையால்பந்தலல்லோ உத்தமிக்குந்தானுமிட்டார்
நலலதம்பிசேனைகட்கு நலமாகப்பந்தலிட்டார்
தன்னுடையசேனைகட்குந் தருமானபந்தலிட்டார்
அப்போது நல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்
கல்தச்சரையழைத்துக் கட்டழகனேதுசெய்தான்
தச்சர்களேதச்சர்களே தருமான தச்சர்களே
என்வார்த்தைகேளுங்க ளெனக்கிசைந்ததச்சர்களே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எந்தனுடன்பிறந்த எனக்கிளையாள் நல்லதங்காள்
எழுபிள்ளை நல்லதங்கா ளென் வீடுவந்தயிடத்தில்
பசித்தமுகம்பார்த்துப் பாலாடைபால்வார்க்காததால்
களைத்தமுகம்பார்த்துக் காண்டிப்பால்வார்க்காததால்
என்தங்கைநல்லதங்கா ளேந்திழையும்கோபமாகி
கோபம்பொறுக்காமல் கொம்பனையுந்தானடந்து
பிள்ளைகளும்தானும்போய்க் குதித்தாள்பொய்கையிலே
மக்களுந்தானு மாண்டாளேபெருந்துயரில்
அப்படிச்செய்ததொரு அரும்பாவியென்மனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல்போடென்றான்
எரிபந்தல்போட்டுக் கவிழ்த்துவிடும்சேனைகளை
அந்தவுரைகேட்டு அழகுள்ளதச்சரெல்லாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல்போட்டார்கள்
பெரும்பாவிசேனைகட்குப் பெரியபந்தல்போட்டார்கள்

மூளியலங்காரி மூதேவிசண்டாளி
ஆணழகன் நல்லதம்பி அனர்த்தம்வரப்பந்தலிட்டார்
சூத்திரப்பந்தலிட்டார் சுழற்பந்தல்தானுமிட்டார்
கல்லாலேபந்தலது காகம்வராத்தானுமிட்டான்
தன்னுடையசேனைகட்குத் தென்னோலைப்பந்தலிட்டார்
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னனேதுரைப்பான்
மன்னவன் நல்லதம்பி மர்மமாயேதுரைப்பான்
மூலியலங்காரி மூதேவிநாயகிக்கு
படுபாவிநாயகிக்கு பட்சமாயேதுரைப்பபன்
உங்கள்மனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பும்
எங்கள்மனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன்
என்றுரைத்துநல்லதம்பி யாவர்க்கும்பாக்குவைத்தார்
கப்பல்கடந்து கடலேறிப்பாக்குவைத்தார்
வற்றிக்கிடந்ததொரு வானகாவேரி
காவேரிநிரம்பியங்கே கரைபுண்டுவந்ததுபோல்
பூரித்திருதோளும் பொன்னுபாணமின்ன
மாட்டின்மேல்பாக்குமங்கே மனிதருக்குபோகவிட்டார்
சின்னமடிகோலி சீமையெங்கும்பாக்குவைத்தான்
பெரியமடிகோலி பூமியெங்கும்பாக்குவைத்தான்
கலியாணமென்றுகூறிக் கடலேறிபாக்குவைத்தான்
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடையசேனைகட்கும் தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
ஜாதிஜனங்களுக்குத் தனிபாக்குத்தானளித்தான்

நல்லதம்பி ஓலையெழுதி அனுப்புதல்

ஆணலழகுமன்னன் அறிவுள்ளநல்லதம்பி
என்னவென்றுசொல்லி எழுதுவானோலைதன்னை
என்பிள்ளைதம்பியற்கு இயலாகவிப்பொழுது
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
வெள்ளிக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லிப் பாங்கானஓலையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அனைவருந்தாமறிய அவ்வோலைஎழுதினனே
கலியாணவோலைதன்னைக் கடுகெனவேயெழுதினனே

அப்போமன்னவன் நல்லதம்பிமர்மமாயெழுதுகிறான்
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கைநல்லதங்காள் இளங்கொடியாள்நாயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணுமேதங்கை
தங்கையும்பெற்றெடுத்த தனஞ்செயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதிமூன்றுந்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையிலே
பாழுங்கிணறுதனிலே பத்தினியும்பிள்ளைகளும்
விழுந்துஇறந்தார்கள் விதியினுடகாரணத்தால்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுண்டஞ்சேர்ந்தார்கள்
அரும்பாவிதன்னாலே அரண்பாதம்சேர்ந்தார்கள்
கொடும்பாவிதன்னாலே கொம்பனையாள்தானிறந்தாள்
மாண்டுமடிந்தசேதி வையகத்தார்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளோர்தாமறிய
ஓலையெழுதினானே உத்தமசிகாமணியும்
மாண்டுமடிந்தாரென்று மாணவோலையெழுதினானே
ஓலையெழுதியல்லோ உகந்துகுறியுமிட்டு
இறந்தவோலைதானெழுதி இருபக்கம்சுட்டெரித்து
இருவோலைதன்னையு மிசைவாகத்தானெடுத்து
தூதுவனையழைத்து சுருக்காயெடுத்துரைப்பான்
ஓலைசுருள்கொடுத்து உத்தமனுமேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்கு
கலியாணவோலைதன்னைக் கையிற்கொடுத்தபின்பு
தூதுவரானவர்க்குச் சுருக்காயெடுத்துரைப்பான்
எந்தனுடசேனைகட்கு இறந்தவோலைகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைத்தான்வாங்கிக் கொப்பெனவேதானடக்க
அரசன்சொல்கடவாமல் அப்பொழுதேபோகலுற்றார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கும்
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலையைத்தான்கொடுத்து உத்தமரும்வந்துவிட்டார்
இப்படியாகஇருக்கின்றவேளையிலே
இருதிறத்துச்சேனைகளும் அங்கேபயணம்வாரார்
மூளியலங்காரி மூதேவிசேனையர்கள்

வருகின்றசந்தோஷம் மட்டுமிதங்களில்லை
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
காணமுடியாது கட்டுரைக்கலாகாது
அவரவர்கள்-தங்ககிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துக்கிரீடமும் முடிமன்னர்தோளழகும்
பவளக்கிரீடமும் பார்மன்னர்தோளழகும்
உத்தரீயம்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெலாம் தெருவீதிவாராரே
ஆனையேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனே கொண்டைதாங்கிப்பூவுடனே
அவர்களதுதேவிகளும் அனேகம்பேர்தாதிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
பாங்கிமாரெல்லோரும் பல்லக்குத்தாங்கிவா
வந்துநிறைந்தாராம் வாசலிடங்கொள்ளாமல்
பந்தியாயுட்கார்ந்தார் பந்தலிடங்கொள்ளாமல்
இவளுடையசேனைகள் இப்படியாயிருக்க
ஆணழகன்நல்லதம்பி அவனுடையசேனைகட்கு
இவனுடையமனிதருக்கு இறந்தவோலைவந்தபின்பு
ஓலைச்சுருள்படிக்க உடன்பிரித்துப்பார்த்தார்கள்
நாமக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராஜாவின்
சேனைகளத்தனையுஞ் சேர்ந்துமிகவழுதார்
முட்டியழுதார்கள் முகத்தில் அறைந்துகொண்டு
அவரவர்கள்கையால் அடித்துக்கொண்டுதானழுதார்
தாய்வீட்டுச்சேனையெலாந் தலைவிரித்துத்தானழுதார்
மார்பில் அறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதார்
போய்ப்பார்ப்போமென்று புண்ணியர்கள்வாரார்கள்
கண்டுவருவோமென்று காரிகைமார்வாரார்கள்
வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
இளைப்பும்களைப்புமாக எல்லோரும்வாரார்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேவுள்நுழைந்தார் வாசலிடங்கொள்ளாமல்
நேர்த்தியாயமைந்திருக்கும் சூத்திரப்பந்தலின்மேல்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்துநிறைந்தார்கள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே



நல்லதம்பி பிள்ளை தாலி தரித்தல்

நல்லதம்பிபெற்றெடுத்த நாமமுடியானைச்
சீயக்காய்நெல்லி சிறுபயறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவறையின்மேல் மாப்பிள்ளையைக்குந்தவைத்து
மாப்பிள்ளைக்கும்பெண்ணுக்கும் மணவறையில்நலங்கு
சிக்கைக்கழித்தார்கள் சீராகயிருவருக்கும் [யிட்டார்
ஸ்நானங்கள் செய்துவைத்தார் தாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரிகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்புமிட்டு
மாப்பிள்ளையைக்கண்டுவந்து மன்னாலங்கரித்தார்
அநேகவிதபூஷணத்தால் அலங்கரித்தான்பின்பு
பொற்கொடிமாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையுங்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவறையின்முன்பாக மன்னவரைக்குந்தவைத்து
அரசாணைமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
முந்நூறுபார்ப்பார்கள் மூகூர்த்தமிட்டமாங்கலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமாங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலியைக் கழுத்திலேயென்றுரைத்தார்
அப்போது ஆணழகன் அப்படியேகேட்கலுற்றான்
என்னவென்றுசொல்லி எடுத்தவன்கட்டலுற்றான்
சிவசிவாவென்றுசொல்லி திருக்கழுத்தில்கட்டினனே
அரகராவென்றுசொல்லி அழுத்தினன்மங்கிலியம்
பிரமமுடிமூன்றுமுடி போட்டான்பிற்பாடு
அங்கிருந்தமன்னரெல்லாம் அழகுபட்டங்கட்டினார்கள்
அம்மான்மாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்
நல்லதம்பிபெற்றெடுத்த நவமணியுமேதுரைப்பான்
என்-ஐயாவேஐயாவே அடியேனொருவார்த்தை
உம்முடன்தான்பிறந்த உத்தமியாள்நல்லதங்காள்
அவளுமொருசீமை ஆளுகின்றாளென்றீரே
அவளம்பேரைச்சொல்லி அழகுபட்டங்கட்டுமென்றான்
அத்தைபேரைச்சொல்லி அணியவேண்டுமென்றான்

அத்தையின்பேருரைக்க ஆணழகன்வயிறெரிந்து
பொன்னிற்குடமேயென் பூபாலராஜாவே
அத்தையைக்கொன்றவள் தானரும்பாவியுன்தாயார்
மாமியைக்கொன்றவள்தான் மாபாவியுன்தாயார்
என்று- அதிகவயிறெரிந்து அப்போது நல்லதம்பி
வாளையுருவி மன்னவனுந்தானெழுந்தான்
தகப்பனிடகோபமதைத் தார்வேந்தன்தான்பார்த்து
ஐயாவேஐயாவே அதிகக்கோபங்கொள்ளாதே
கலியாணவாசலிலே கலகங்கள்வைக்காதே
இங்குவைத்தசூத்திரங்க ளெனக்குத்தெரியவரும்
அதற்குமேல்சூத்திரங்க ளறிவேன்காணென் தகப்பா
இன்னுமொருநாழிகையில் இங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அான்பாதஞ்சேருதுபார்
மாதாவின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
அரும்பாவிசேனையெல்லாம் அடியோடேமாளுதுபார்
மாபாவிசேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பதறாதேபதறாதே பட்சமுள்ளஎன் தகப்பா
பொறும்பொறுமென்று பொன்னடிக்குத்தெண்டனிட
அப்போ- ஆறினான்கோபம் அமர்ந்தான்கொலுதனில்
கலியாணசடங்குகள் கடுகமுடிந்தவுடன்
மூளியலங்காரி மூதேவி நாயகிக்கு
மன்னவனார் நல்லதம்பி மர்மமாயெடுத்துரைப்பான்
உங்கள்மனிதருக்கு உண்ணவேநீபடைப்பாய்
எங்கள்மனிதர்க்கு யான்படைப்பேன்சாதங்கறி
தன்கணவன்சொன்னபடி சம்மதித்தாள்மூதேவி
அப்போதுபந்திகள் அமர்த்தினார்பந்தலிலே
மூதேவிசேனைகள் முடிமன்னரெல்லோரும்
சூத்திரபந்தலின்கீழ்ச் சூழ்ந்திருந்தாரெல்லோரும்
நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலின்கீழ்ப்
பக்கங்கொலுவிருந்து பந்தியமர்ந்தார்கள்
வரிசைவரிசையாக வந்தவாக்கிலைபோட்டு
வாழையிலைபோட்டு வட்டித்ததோர்சாதங்கறி
இவளுடையசேனைக்கும் இவள்பரிமாறிவாராள்
நல்லதம்பிசேனைக்கு நங்கையவளேதுசெய்தாள்

வஞ்சனையாகவல்லோ வட்டித்துவாராளே
வரகரிசிச்சாதமது வட்டித்தாளப்போது
அகத்திக்கீரைக்குழம்பதனை அள்ளியவள்வார்த்து
வஞ்சனைசெய்துமல்லோ வாராளலங்காரி
தங்களுடையசேனைக்குத் தகுந்தபடியேதுசெய்தாள்
குத்துப்பருப்புமிட்டாள் கூசாமல்நெய்சொரிந்தாள்
அள்ளிப்பருப்பிட்டாள் அதுகண்டுநெய்வார்த்தாள்
பத்துக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபச்சடியும்
சுத்திக்கறியும்வைத்துச் சொப்புதயிர்முன்வைத்தாள்
உண்ணுங்களென்றுகூறி உபசாரணைசெய்திருந்தாள்
நல்லதம்பிசேனைகட்கு நடக்குது இந்தவிதம்
அப்போமூளியலங்காரி மூதேவிநாயகியும்
தன்னுடையசேனைகட்குத் தான்பரிமாறிவாராள்
பவையுடைசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்தநல்லவேளையிலே அங்கிருந்தசேனையர்கள்
ஆகாததுர்க்குறிகள் அட்சணமே கண்டார்கள்
இருக்கின்றமன்னருக்கு இடதுதோள்துடித்திடுமாம்
வந்திருந்தமங்கையற்கு வலதுகண்துடித்திடுமாம்
வைத்திருந்தசாதங்கறி ரத்தகவுல் அடிக்கும்
உற்றபதார்த்தவகை உதிரகவுல் அடிக்கும்
அங்குள்ளசேனையெல்லாமவர்களுமேதுசொல்வார்
அப்போதுசேனைக ளடங்கலுமேதுசொல்வார்
என்னமோஏதோ இடிவந்துநேர்ந்திடுமோ
மாளாப்பழிநமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிநமக்குச் சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமன்னவர்க ளேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
என்னமோயேதோவென்று இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதம்பிசேனைகட்கு நன்றாய்ப்படைத்துவாராள்
அகத்திக்கீரைக்குழம்பு அடைவாகத்தான்வைத்தாள்
உண்ணுங்களென்று உபசாரணைசெய்துவாராள்
சாதமுங்கீரைநல்லதம்பி சேனையுண்ணுதபார்
முன்சோறுஉண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

நல்லதம்பி ஆசாரியாரைக் கண்டு மூளியலங்காரி சேனையின் பேரில் சுழற்பந்தலைத் தட்டி மடிய வைத்தல்

அப்போது நல்லதம்பி ஆசாரிக்கெடுத்துரைப்பான்
அண்ணடா அண்ணடா ஆசாரி அண்ணடா
ஆர்க்காணுமாசாரி அரியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லா முழுதுமடிவதற்கு
அவதானப்பந்தலை அடுக்காகத்தட்டிவிடும்
போய்நீரும்தட்டிவிடும் புத்தியுள்ள ஆசாரி
பந்தலின் சூத்திரத்தைப் பார்த்துவிடுமாசாரி
என்றுசொல்ல நல்லதம்பி எடுத்துவிட்டானுசாரி
தந்திரமாய்ப்பந்தலைத் தட்டிவிட்டானுசாரி
அவதானப்பந்தலை அடுக்காகத்தட்டிவிட்டான்
மூளியுடசேனையெல்லாம் முறிந்துமடியுதங்கே
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
கைமுறித்துக்கொண்டு கதவருகேபோய்ச்சேர்ந்தாள்
என்னசெய்யப்போறேனென்று ஏங்கியழுகலுற்றாள்
ஒற்றைக்காலவிட்டு ஓங்கியழுகலுற்றாள்
மாபாவிசிமையில் மன்னர்களைத்தோற்றுவிட்டேன்
பெரும்பாவிசிமையிற் பெண்டுகளைத்தோற்றுவிட்டேன்
ஒருகோடிகும்பிழந்து ஒற்றைக்காலாகிவிட்டேன்
சூதுசெய்துகொன்றானே துரோகியவனென்கணவன்
கல்லாலேபந்தலிட்டுக் காளைகளைக்கொன்றுவிட்டான்
ஒருத்திவந்துள் நுழைந்து ஒருகோடிகும்பிழந்தேன்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நின்றுபுலம்புகையில் கண்டானேராஜமன்னன்
ஆணழகன் நல்லதம்பி யலங்காரிக்கெடுத்துரைப்பான்
பத்துப்பேரைக்கொன்ற பழிசூலத்திவாடியென்று
எட்டுப்பேரைக்கொன்ற இழிசூலத்திவாடியென்று
என்னென்னபங்கம் இளங்கொடிக்குச்செய்யலுற்றான்
மூன்சிகையைத்தான்பிடித்து நல்லமணப்பந்தலிலே
மூக்குவஸ்தனமறுத்தான் முத்துமணிப்பந்தலிலே
கொண்டையறுத்துக் கொத்தாகத்தொங்கவிட்டான்
காதையறுத்தானங்கே கழுத்திலேதொங்கவிட்டான்

கண்ணைப்பிடுங்கியே எண்ணெயையூற்றிவைத்தான்
இன்னமும்நல்லதம்பி ஏதேதுசெய்யலுற்றான்
கழுதையைக்கொண்டுவந்து கட்டழகிமூளியாளைக்
கழுத்திலெருக்கமாலை கனமாகச்சூட்டிவிட்டான்
கழுதைமீதேற்றிவைத்துக் கைகொட்டிநகைத்தானே
சேவகனைத்தானழைத்துத் தெருவிலிழுங்கனென்றான்
கழுதையைக்கைபிடித்து கடுகயிழுங்களென்றான்
அழகுள்ளவீதியெல்லாம் அங்கெங்கேசுற்றுமென்றான்
நாலுதெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
மூன்றுதெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
நாலுகோலம்வந்தபின்பு நல்லதம்பியேதுசெய்தான்
மூளியலங்காரி மூதேவிதோஷியரே
சுண்ணாம்புக்கால்வாயில் சுட்டானேசுந்தரியை
சுட்டானேசுந்தரியை சுகமான நல்லதம்பி
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மனையாளைச்சுட்டெரித்த மற்றுனைள்காசிராஜன்
மச்சான்வரவை மன்னவனும்பார்த்திருந்தான்
நல்லதங்காள்நாயகனும் நற்காலந்தான்பிறந்து
காசிராஜனுக்குக் காலந்தெளிந்ததங்கே
காலமதுதெளிந்து கனத்தமழைபொழிந்தது
சீமையதுதெளிந்து செல்வமழைபொழிந்தது
முப்போகம்விளைந்தது முயற்சியுள்ளசீமையிலே
காலந்தெழிந்தது கம்புவிளைந்தது
சீமையதுசெழித்தது செல்வமழைபெய்தது
நாடுசெழித்தது நல்லமழைபெய்தது
கருப்புதெளிந்தபின்பு காசிராஜனேதுசெய்தான்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவேண்டுமென
நல்லதங்காள்நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிக்கடைக்குவந்தான் சேலைவிலைமதித்தான்
பார்ப்பான்கடைக்குவந்தான் பட்டைவிலைமதித்தான்
பாரியாளேறிவரப் பல்லாக்குகொண்டுவாரான்
புத்திரர்களேறிவரப் பொன்கொடிகொண்டுவாரான்
பலபலகனிவகைகள் பாலருக்குக்கொண்டுவாரான்
சிற்றுடைகொண்டுமே சிறுசதங்கைகொண்டுவாரான்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவாரானே

குதிரைபரிவாரம் கோடிதளமுன்னடக்க
ஆனைபரிவாரம் அடங்கலும்பின்னடக்க
கவிஞர்கவிபாடக் கட்டியங்கள்கூறிவர
ஆனையும்சேனையும் அத்தனையுமுன்னடக்க
எக்காளந்தானூத இடிபாணந்தான்முழங்க
நாதசுரமூத நவிரிநற்கொம்பூத
பேரிகைக்கொட்டிவரப் பெரியசின்னமூதிவர
கத்திகட்டுஞ்சேவகரும் காவலருமுன்னடக்க
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக் காசிநாடனெடுத்துரைப்பான்
மைத்துனரேயெந்தன் மனையாட்டியெங்கேயென்றான்
எலுமிச்சவர்ணமான இளங்கொடியெங்கேயென்றான்
என்றகாசிராஜனுக்கு ஏதுசொல்வான் நல்லதம்பி
அருந்தங்கைசெத்துமச்சான் அநேகநாளாச்சுதப்பா
அப்போதுகாசிராஜன் அடைவாகஏதுசொல்வான்
பெண்சாதிபோனாற்போகுள் பிள்ளைகளெங்கேயப்பா
என்றுமேகாசிராஜன் இசைவாகக்கேட்கையிலே
அருந்தங்கைதன்னுடன் அருமைமக்களேழுபேரும்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
என்றுநல்லதம்பி எடுத்துரைத்தான்மைத்துனர்க்கு
அப்போதுகாசிராஜன் அவசரமாய்க்கேட்கலுற்றான்
ஒன்றிரண்டுமாண்டாலும் உலகத்திலுள்ளதென்பார்
ஏழுபிள்ளைமாண்டவித மெனக்கறியகூறுமென்றான்
அந்தவுரைகேட்டு ஆணழகன் நல்லதம்பி
மர்மமொழியாமல் மைத்துனருக்கேதுசொல்வான்
வந்தாளே நல்லதங்காள் மக்களுந்தானுமாகக்
காட்டில்கண்டுநான் வீட்டுக்குப்போங்களென்றேன்
எந்தனுரைப்படியே இளங்கொடியாள்வீடுவந்தாள்
புத்திரருந்தானுமாகப் பொற்கொடியாள்வந்தாளென
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
செய்தகொடுமையாலே செல்வவதிபிள்ளைகளும்
கோபம்பொறுக்காமல் குதித்தார்கள்பொய்கையிலே
அந்தவிசேஷம் அறிந்துநான்நாடிவந்து
மாண்டவரைநானெடுத்து மயானச்சடங்குசெய்தேன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி



தங்கைபழிக்காகத் தருந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்
நான்-இறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றவுரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைக்குக்காட்சியாய்ப் பெண்கொண்டுவாராமல்
கலியாணஞ்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனே
மைந்தரைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனே
என்றுமேகாசிராஜன் இனியில்லாத்துக்கமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவிசனத்துடன்
தங்கையைப்பார்க்கிலும் தாணியாளப்போறேனே
மச்சானைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனே
என்றுமவன் நல்லதம்பி இனியாருக்கோபமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
இவ்விதமாக இவர்கள்மடிந்திருக்க

நல்லதங்காள்-நல்லதம்பி-காசிராஜன் ஏழுபிள்ளைகள் இவர்கள் மடிந்திருப்பதைக் கண்டு பார்வதியும் பரமசிவனும் வந்து எழுப்புதல்

பார்வதிதேவியர்க்குப் பார்க்கமுடிபோகவில்லை
பரமசிவனுக்குப் பார்க்கமுடிபோகவில்லை
ஈஸ்வரனுமீஸ்வரியும் இரக்கமுடன்தானெழுந்து
இடபவாகனமேறி இன்பமுடனப்பொழுது
கைலாசம்விட்டுமவர் கடுகப்பயணமதாய்
கப்பறையில்தண்ணீரும் கையில்பிரம்புகொண்டு
கையில்பிரம்பெடுத்துக் கப்பறையில்ஜலமெடுத்து
செத்தவர்கள்தன்மேல் சீராய்தெளிப்பதற்குப்
பார்வதிதேவியரும் பரமசிவனாரும்
கைலாசம்விட்டல்லோ கடுகவழிதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இவர்களும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்துநின்று
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்வந்துநின்று
ஏழுபிள்ளை நல்லதங்காள் இறந்துகிடப்பவர்மேல்

தண்ணீரைத்தான் தெளித்துத்தட்டிஎழுப்பினளே
அப்போ-தூங்கிஎழுபவர்போல் சுகமாகஎழுந்தார்கள்
ஏழுபிள்ளை தாயுமப்போ எழுந்துமேவந்தார்கள்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்
ஏழுபிள்ளை தாயுமப்போ எழுந்துமேவந்தார்கள்
அப்போநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
ஆரகாமகாதேவா அந்திக்கண்ணுபாசுபாணி
எல்லாருக்குள் நிறைந்து நின்றஏகபாஞ்சுடரே
என்தாயேபார்வதியே என்னையாளவந்தவளே
எங்களையெழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள்தரிசனங்கண்டு உள்ளமெல்லாம்பூரித்தோம்
எங்களுக்குக்காட்சிதா இன்பமுடன்வந்தீர்கள்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனாரும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியாயிருக்க இளங்கொடியாளேதுசொல்வாள்
பத்தாவேபத்தாவே பாராளும்பத்தாவே
உன்-பேச்சைநான்கேளாது பிழைமோசம்போனேனே
வார்த்தைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலல்லோ பிழைமோசம்வந்ததென்றாள்
தப்பாமல்வானப்பத்தா தலையிலிடித்ததிங்கே
பேய்கொண்டபாவியை பிறப்பென்றுநம்பிவந்தேன்
சண்டாள அண்ணனை நான் சதமெனநம்பிவந்தேன்
என்-ஆசைக்கணவாநீ அன்பானவார்த்தைகேளும்
என்னைப்போல்பெண்சாதி இவ்வுலகில்கிட்டாதோ
வேசிகிடையாளோ வெள்ளாட்டிக்கிடையாளோ
தாசிகிடையாளோ தகுமொருத்தியாகாதோ
நாட்டியப்பெண்களிலே நல்லபெண்கிட்டாதோ
உங்கள்குலமதிலே ஒருபெண்ணுங்கிட்டாதோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதியுனக்கேன்
பெண்சாதிமாண்டாளென்று பின்னேமடியலாமோ
எனக்காகநீமாண்டால் ஏசாதோயிவ்வுலகம்
நீ-மாண்டுமடிந்தாலே மண்டலத்தாரேதுசொல்வார்
செத்துமடிந்தாக்கால் சீமையுள்ளாரேதுசொல்வார்
எனக்காகஉன்னுயிரை. ஏன்மாய்க்கவந்தீரிப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகத்தானுரைத்து

அண்ணாவே அண்ணாவே அண்ணியுட வார்த்தை
கேட்டீரோ அண்ணாவே கிளிமொழியாள் வார்த்தை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடைய தன் வார்த்தை அறியவே நீர்கேளும்
நான்வருஞ் சேதிதன்னை நாயகியாள் தான்கேள்க்க
ஓடிக்கதவடைத்து ஒட்டிச்சுவர் மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்துச் சரியாகமண்ணறைந்தாள்
படாதபாடெல்லாம் பாவிபடுத்திவைத்தாள்
அண்ணாவே அண்ணாவே ஆரணங்கையிப்பொழுது
ஆக்கினை செய்யாதே ஆழியில்வைக்காதே
இவளை-கல்லிலெழுதி கண் காண நாட்டவேண்டும்
காரியுமிழவேணும் கண்டார்சிரிக்கவேண்டும்
என்றுமே நல்லதங்காள் இயல்பாசுத்தா னுரைக்க
அப்போது நல்லதம்பி ஆணழகனே துசொல்வான்
எந்தன்பிறப்பே நீ இளங்கொடியே நல்லதங்காள்
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயோ
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டாயோ
இப்போ-நானண்ட சீமையெலாம் நீயாளவேணுமம்மா
நீயாண்ட சீமையெலாம் நானாளவேணுமம்மா
என்றுமே நல்லதம்பி இன்பமாய்ச்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கே துரைப்பாள்
அண்ணாவே அண்ணாவே அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானால் சீமைக்கு ஆகாது
அப்போது மூளியலங்காரி மூதேவி நாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும் கடுகவே நாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார் நகைக்கவேணும்
என்றுமே தான்சொல்லி இன்பமாய் நல்லதங்காள்
அண்ணனைத்தான்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
என்- அண்ணாவே அண்ணாவே அன்பாகநீர்கேளும்
ஆசாரிதன்னை நீ அதிகவிரைவுடனே
அழைத்தோடிவாருமென அரிவைஎடுத்துரைத்தாள்
அப்போது நல்லதம்பி அதிகத்துரிதமுடன்
ஆசாரிதன்னை அவனழைத்தோடிவந்தான்
ஆசாரிதன்னைப்பார்த்து அரிவைஎடுத்துரைப்பாள்

பட்டணத்திற்கீர்த்தியுள்ள பாங்கியாசாரி
எனக்கு-காசினியில்கோயிலொன்று கட்டிவை ஆசாரி
மாதமொருதிருநாள் மகிழ்ச்சியாய்த்தானடத்தும்
வருஷமொருதேர் வரிசையாத்தானடத்தும்
என்றுசொல்லிநல்லதங்காள் ஏந்திழையுமப்போது
நல்லதங்காள்ஏழுபிள்ளை நாட்டில்வன்னிமரமாக
வன்னிமரக்கண்ணுகி மாசின்றிநிற்கின்றூர்கள்
நினைத்தவரமளித்து நீணிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும்மச்சானும் மங்கைநல்லதங்காளை
கண்டுமகிழ்ந்திருவர் கைலாயஞ்சேர்ந்தார்கள்

வாழி

சடையிற்பிறையணிந்த சங்கரனூர்தன்னருளால்
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்ஆரியரும்
நாரியருளங்களிக்க நல்லநங்காள்தன்கதையை
அஷ்டதிசைபுகழ அச்சிலிதைதானியற்றிக்
கற்றோரும்மற்றோரும் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்த்
தம்மாலியின்றமட்டும் தப்பிதங்களைத்திருத்தி
இம்மானிலத்தோர்புகழும் மகாகணபதியருளால்
பச்சைமயிலேறும் பார்வதிசுதனருளால்
ஞானந்தரும்நூல்களை நாடோறும் அன்புடனே
அச்சிற்பதிப்பித்து அனைவர்க்குமுதவினோரும்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
பால்போல்ருசிக்கப் பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கியநால்வேதம் உயிர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனூர்

நல்லதங்காள் கதை

முற்றிற்று.

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1.